

# இதோ சைவ சித்தாந்தம் தெரிந்து கொள்ளுங்கள்!

புலவர்மணி, சித்தாந்த வித்தகர்
முரு. பழ. இரத்தினம் செட்டியார்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# இதோ சைவ சித்தாந்தம் தெரிந்து கொள்ளுங்கள்!

புலவர்மணி, சித்தாந்த வித்தகர்

முரு. பழ. இரத்தினம் செட்டியார்

முதற் பதிப்பு : ஏப்ரல், 17 - 1991

வெளியீடு :-

மலேசிய திருமுறை மாணவர்கள்
18, ஜாலான் SS 19/6 E, 47500 சுபாங் ஜெயா,
சிலாங்கூர் டாருல் ஏசான்.
தொலைபேசி : 7339041

விலை :- ரிங்கிட் $3.00

நூல் கிடைக்கும் இடம் :-

SRI VIDYA PUBLICATIONS,
82 - A. Jalan Pulasan,
Off Jalan Tengku Kelana,
41000 Klang. Tel : 03-3321973

உ
சிவமயம்

# முகவுரை

மலேயகத்தில் திருமுறைகளும், சைவ சித்தாந்த சாத்திரங்களும் பரவ வித்திட்டவர் மலேசிய அருள் நெறித் திருக்கூட்டத்தை நிறுவியவரான சைவப் பெரியார் திரு. கா. இராமநாதன் செட்டியார் ஆவார். அவருடன் இணைந்து நின்று பட்டிதொட்டி எல்லாம் சென்று அயராது உழைத்துத் திருமுறைகளையும், சித்தாந்தத்தையும் எளிய முறையில் எல்லாருக்கும் இன்றுவரை புகட்டி வருபவர், புலவர்மணி, சித்தாந்த வித்தகர் திருவாளர் முரு.பழ. இரத்தினம் செட்டியார் அவர்கள், தமிழ் நேசன்வழி பல்லாண்டுகள் சைவ சமயம் தொடர்பான ஆயிரக்கணக்கான ஐயங்களை அவர்கள் தீர்த்து வைத்ததை, யாரும் எளிதில் மறந்துவிட இயலாது.

தாமாகவே பல நூல்களையு கற்றுணர்ந்து சமய அறிவைப் பெருக்கிக் கொண்டதோடு அமையாது பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், திரு. வி.க. மறைமலை அடிகள் போன்ற சித்தாந்தச் செம்மல்களுடன் பழகிச் சித்தாந்த சாத்திரங்களை ஆழமாக அறிந்துள்ள சித்தாந்த வித்தகர் அவர்கள், தமிழகத்தில் இன்று பெரிதும் மதிக்கப் பெறும் சித்தாந்த அறிஞர் சிலரில் ஒருவராகத் திகழ்கிருர்கள். தமிழகத்தில் சிந்தாந்தப் பயிர் வளர்க்கும் சைவ சித்தாந்தப் பெரும் மன்றம், சைவமும் தமிழும் தலைத்தினிதோங்கப் பாடுபடும் சைவ ஆதீனங்கள், கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்க்கும் கம்பன் கழகம் 'போன்ற பல பெரிய அமைப்புகள் - இயக்கங்களிலும், கடல் கடந்து ஸ்ரீலங்காவிலும், மலேயகத்திலும், பன்முறை சொற்பொழிவாற்றியும் தலைமைதாங்கியும், அரிய பெரிய கருத்துக்களை அவ்வப்போது வெளியிட்டு வருபவர் சித்தாந்த வித்தகர் செட்டியார் அவர்கள்.

மேலும், கற்றுணர்ந்தோர் மட்டுமே புரிந்துகொள்ளக்கூடிய கரடு முரடான விஷயமென்று கருதப்பெற்று வரும் சைவ சித்தாந்த சாத்திரத்தைப் பாமரரும் அறிந்துகொள்ளும் வகையில் மிக எளிமையாகப் பொருள் பொதிந்த நகைச்சுவையுடன் மலேசியாவில் பரப்பி வருபவர் திரு. இரத்தினம் செட்டியார் அவர்களே என்ருல், அதில் இருவேறு கருத்துகளுக்கு இடமேயில்லை.

இத்தகைய சிறந்த சித்தாந்தச் செம்மலைக் கொண்டு, இன்னும் இளைஞர்கள் பலர் அடிப்படைச் சித்தாந்தக் கருத்துக்களை அறிந்துகொள்ளச் செய்ய வேண்டும் என்று எண்ணிய பல்வேறு சமய அமைப்புகளைச் சார்ந்த திருமுறை மாணவர்களான நாங்கள் 1990ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் பெட்டாலிங் ஜெயாவில் உரையரங்கு ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தோம். அது நாங்கள் எதிர்பார்த்ததைவிடப் பெரிய வெற்றியாக அமைந்தது: மாபெரும் வரவேற்பைப் பெற்றது.

அந்த உரையரங்கில் சித்தாந்த வித்தகர் அவர்கள் ஏழு தலைப்புகளில் ஆற்றிய உரைகள், கேள்விபதில்கள் ஆகியவற்றை நூல் வடிவில் கொண்டு வந்தால், அது இன்று மட்டுமன்றி எதிர்காலத்துக்கும் பேருதவியாக இருக்கும் என்று பலர் எண்ணினர். அதன் விளைவே இந்தச் சிறு நூல்.

இதில் சைவ சமயம்-திருமுறைகள்-சித்தாந்தம் ஆகியவை பற்றிய அடிப்படை உண்மைகளை, மிக எளிய முறையில் எல்லாரும் புரிந்து கொள்ளும் வகையில் சித்தாந்த வித்தகர் அவர்கள் விளக்கியிருக்கிறார்கள்.

இது போன்று, சித்தாந்த வித்தகர் அவர்களின் இன்னும் பல நூல்களை எதிர்காலத்தில் வெளியிடும் திட்டங்களைத் தீட்டியிருக்கிறோம். அவற்றின் தொடக்கமே ''இதோ சைவ சித்தாந்தம்! தெரிந்து கொள்ளுங்கள்!'' என்னும் இந்த நூல்.
இதனை வாங்கிப் படிப்பதன்வழி, சித்தாந்தக் கருத்துக்களைச் செம்மையாகத் தெரிந்துகொள்ள வாய்ப்பேற்படும்.

திருமுறை மாணவர்களான எங்களின் கோரிக்கைகளை முழுமனதுடன் ஏற்று, எங்களை நல்வழியில் நடத்தும் ஆசான், சித்தாந்த வித்தகர் அவர்களுக்கு, நாங்கள் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். அவர்கள் இன்னும் பல்லாண்டுகள் இனிதே வாழ்ந்து, சைவமும் தமிழும் தழைத்தோங்கவும், எங்களைப் போன்ற ஆயிரமாயிரம் இளம் உள்ளங்களைச் செம்மை நெறியில் செலுத்தவும் தொண்டாற்ற, எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் புரிவானாக!



ஒலி நாடாக்களிலிருந்து உரைகளைத் தொகுப்பதிலும் திருத்தி எழுதுவதிலும் துணை புரிந்த அன்பர்களுக்கும், இந்நூலினைச் சிறந்த முறையில் அச்சிட்டு உதவிய அச்சகத்தினருக்கும், உரையரங்கு சிறப்பாக நடைபெற உதவியோருக்கும் எங்கள் நன்றி என்றும் உரியது.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக
உலகமெல்லாம்!

அன்புடன்,
திருமுறை மாணவர்களின் சார்பில்,

**ஆ. ஆதிமூலம்.**

திருச்சிற்றம்பலம்

# வாழ்த்துரை

அன்பே சிவம்

பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய சித்தாந்த வித்தகர் திரு. முரு.பழ. இரத்தினம் செட்டியார் அவர்கள் கோலாலம்பூரில் அன்பர்கள் வேண்டுகோளுக்கு இணங்கி சமய மாணவர்கட்கும் மற்றவர்கட்கும் பயன்தரும் சமயத்தொடர் சொற்பொழிவு நிகழ்த்தியுள்ளார்கள். சமயத் தத்துவங்கள், இறை இலக்கணம், ஆன்ம இலக்கணம், பாசங்கள் பற்றிய விளக்கங்கள், பாசங்களிலிருந்து நீங்கி இறைவன் திருவடியை அடைவதற்காகச் செய்ய வேண்டிய சாதனங்கள், ஜீவபோத மற்றும் இறைவழி நின்ற மெய்ஞ்ஞானிகளாகிய சமய குரவர்கள் வாயிலாகவும், திருமுறை ஆசிரியர்கள் மூலம் இறைவன் தந்த வாழ்க்கை உண்மைத் தத்துவம் பற்றிய விவரங்களும் இத்தொடர் சொற்பொழிவில் அனைவர்க்கும் எளிதில் விளங்கும் முறையில் விளக்கியுள்ளார்கள். சொற்பொழிவில் அடங்கியுள்ள உண்மைகளை அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டும் என்னும் நோக்கத்துடன் இச்சொற்பொழிவு நூலாக வெளிவருகிறது. சமயத் தத்துவத்தைக் கற்க வேண்டியதன் அவசியத்தை இந்நூலாசிரியர் தெளிவாக வலியுறுத்தியுள்ளார்கள்.

இந்நூல் சைவ சமய, சித்தாந்த உண்மைகளை எளிமையாகவும், தெளிவாகவும் எடுத்துக்காட்டுக்களுடனும் உவமை முதலியவற்றுடனும் விளக்குகிறது. சமய உண்மைகளைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்ற விருப்பமுடையவர்களுக்கு இது ஒரு பேருதவியாக அமைகிறது.

சித்தாந்த வித்தகர் திரு. முரு.பழ. இரத்தினம் செட்டியாரின் இவ்வரிய சேவை மிகவும் பாராட்டுதற்குரியது. இந்நூலாசிரியர் மேன்மேலும் இது போன்ற நல்ல நூல்களை எழுதி உதவ இறைவன் அருள்புரிவாராக! அன்பர்கள் அனைவரும் இந்நூலை வாங்கி, படித்து சமயவாழ்வில் ஈடுபட்டு வாழ்க்கையின் இலட்சியத்தை இம்மையிலேயே அடைந்து இன்புறுவார்களாக!

**சைவ பூஷணம் இ.வே. கந்தையா**
புரவலர், முன்னாள் தலைவர்,
மலாயா அருள்நெறித் திருக்கூட்டம்,
கோலாலம்பூர்.
*3.3.91*



திருச்சிற்றம்பலம்

# வாழ்த்துரை

22.3.1991

பல சமய அமைப்புகளைச் சார்ந்த மலேசியத் திருமுறை மாணவர்கள், சைவ சித்தாந்த வித்தகர் திரு. முரு.பழ. இரத்தினம் செட்டியார் அவர்களுடைய சமயச்சொற்பொழிவு நிகழ்ச்சிக்கும், ''இதோ சைவ சித்தாந்தம்! தெரிந்து கொள்ளுங்கள்'' என்ற நூல் வெளியீட்டுக்கும் ஏற்பாடு செய்திருப்பது பெருமகிழ்ச்சிக்குரியது.

சைவ சித்தாந்தம் என்பது ஒரு சமயமல்ல. அதற்கும் மேற்பட்ட தத்துவம் அது. எனவேதான் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் சைவப் பெருமக்கள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளத்தக்கவையாக விளங்கி வருகின்றன.

சைவ சித்தாந்தக் கருத்துக்களை விளக்கும் சாத்திர நூல்கள் பதினான்கில், முதலாவதாகக் கருதப்படும் திருவுந்தியார் நூலில்

'அகளமாய் யாரும் அறிவரிதப்பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீபற
தானாகத் தந்ததென்று உந்தீபற'

என்பது முதல் பாடலாகும்.

அருவமாயிருக்கின்ற பரம்பொருள் உருவமாக வந்து அருள் பாலிக்கிறான் என்பது கருத்தாகும். அருவமாகவும், உருவமாகவும், அருவுருவமாகவும் விளங்குகின்ற இறைவன், எந்நாட்டவர்க்கும் இறைவனாகவும், தென்னாட்டிற்குச் சிவனாகவும் திகழ்கின்றான்; போற்றப்படுகின்றான்.

இறைவனை - சிவனை வழிபடுவதற்குரிய தோத்திரங்கள் திருமுறைகள். திருமுறை என்பது வரிசை என்றும் பொருள்படும். மக்கள் வாழ்க்கையை நெறிமுறைப்படுத்தவும், வாழ்வாங்கு வாழத் துணை புரியவும் எழுந்த ஞான நூல்களே திருமுறைகள். இவற்றைத் 'தமிழ் வேதம்' எனச் சிறப்பித்தும் கூறுவர்.

'அன்பே சிவம்' என்றார் திருமூலர். 'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்'. சைவ சமயத்தை சிவ நெறி, அன்பு நெறி, அருள் நெறி எனவும் கூறுவர். பக்தியின் வெளிப்பாடே தொண்டாக மலர்வது. சைவ சமயம் இறை வழிபாட்டையும், சிவத் தொண்டையும் வலியுறுத்துகிறது.

திருமுறை நெறியே சைவப் பெருநெறியாகும். எனவே திருக்கோவில் களிலும், வழிபாட்டுத் தலங்களிலும், இல்லங்களிலும் திருமுறைப் பாராயணம் செய்தலை ஒரு நியமமாகக் கொள்ள வேண்டும். நாட்டிலுள்ள எல்லா ஆலயங்களிலும் பஞ்சபுராணம் கட்டாயம் ஓதப்படுகின்ற காலம் ஏற்படுவதுதான் சைவ சமய வளர்ச்சிக்குப் பொன்னுன காலமாகும்.

திருமுறை மாணவர்களின் முயற்சியும், அவர்களுடைய தொண்டும் வெற்றிபெற எல்லாம் வல்ல சிவசக்தியை வேண்டி இறைஞ்சுகின்றேன்.

இங்ஙனம்,

**செ. சொக்கலிங்கம், ஏ.எம்.என்.**

தலைவர்

ஸ்ரீ மகா மாரியம்மன் கோவில் தேவஸ்-தானம்,

கோலாலம்பூர்.





# வாழ்த்துரை

*நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க*
*இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க*

தமிழரின் பழம்பெரும் இறை நெறி சிவநெறியாகும். சிவநெறிக்கு ஈடான இறைநெறி எவ்வுலகிலும் இல்லை என்றுலும் இந்த இறை-நெறியே தமிழ்ப்பெருமக்களின் வாழ்க்கைநெறி ஆவதில் எண்ணற்ற இடையூறுகள் என்றும் இருந்து வந்திருக்கின்றன. ஞாயிற்றை மறைக்கும் மேகம் போலிருந்து இந்நிலை இன்று மாறி வருகிறது.

தமிழ் நாட்டிலும் மலேசியாவிலும் உலகின் பிற பகுதிகளிலும் சித்தாந்தச் சிவநெறி எழுச்சி பெற்று வருகிறது. ஆன்மீகச் செல்வர்கள் இதனை அறிந்து போற்றுகின்றனர்.

மலேசியாவில் கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக சைவத் திருநெறியை எழுத்திலும் பேச்சிலும் பரப்பி வருவதோடு வாழ்ந்து காட்டுகிற சான்ருேருள் தலைமையானவர் சித்தாந்த வித்தகர் புலவர்மணி முரு. பழ. இரத்தினம் செட்டியார் ஆவார்.

சித்தாந்த சைவத்தின் திட்ப நுட்பங்களை ஆழ்ந்து கற்ற ஆராய்ச்சிப் புலமையோடு அதன் மெய்நலம் கெடாமல் எளிமையினும் எளிமையாக எல்லாருக்கும் எடுத்துச் சொல்வதில் தன்னிகரற்ற செஞ்சொற் புலவராகவும் சித்தாந்த வித்தகர் விளங்கி வருகிருர்.

இன்றைய இளையர் குழாம் இறைநெறியைத் தொட்டு எழுப்பும் எல்லா வகை ஐயங்களுக்கும் தெரிந்த எடுத்துக்காட்டுகளைக் கொண்டு தெரியாத நுட்பங்களை விளக்கும் பேராற்றல் சித்தாந்த வித்தகரின் தனிப்பெரும் சிறப்பு. இச்சிறு நூலிலும் இவ்வாறே உண்மைகளை விளக்குகிருர்.

உண்டு, களித்து உடலின்பத்தில் மிதக்கும் இன்றைய தலைமுறை-யினர், கடவுள் உளரா, சமயம் தேவையா என்றெல்லாம் வினு எழுப்பி வாழ்வை வீணுக்கி வருகின்றனர். இவர்கள் எழுப்பும் வினுக்களுக்கு ஐயம் திரிபற விளக்கம் தருகிருர் சித்தாந்த வித்தகர்.

இச்சிறு நூல் சித்தாந்த சைவத்தின் சாரமாகச் சிறு சிறு தலைப்புகளில் தெளிவாய் அமைந்துள்ளது.

இந்து சமயம் என்பது அறுவகைச் சமயத்தின் கூட்டு. இந்துக்கள் ஒருமைப்பாட்டுக்கு அறுவகைச் சிந்தனை இன்றியமையாததே. ஆனால் தெளிந்த விரைவான ஆன்மீக மேம்பாட்டுக்கு அறுவகைச் சமயத்தில் ஒரு வகைச் சமயத்தில் உள்ளம் வைத்து உணர்வு ஊன்றி வழிபாடு செய்வதே சிறந்த பயனுள்ள முறையாகும். கிருஷ்ண பக்திக் கழகமும் ஹவாய் கௌவை ஆதீன சைவசித்தாந்தத்திருக் கூட்டமும் இக்கருத்துக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாகும்.

சித்தாந்தச் சிவநெறிக்கும் இப்படியோர் இயக்கம் மலேசியாவில் எழ வேண்டும். இன்றைய வாழ்வியல் முறைக்குப் பொருந்திய முறையில் ஆனால், சேக்கிழார் பெரிய புராணம் காட்டும் சிவநெறி மரபுக்கு மாறுபடாமல் இறையியல் வாழ்வுக்கு வழிகாட்டும் ஓர் இயக்கம் விரைந்து எழ வேண்டும் என்று நாம் எண்ணுவதில் குற்றமில்லை.

எம்பெருமான் தில்லைத் திருக்கூத்தன் திருவுளம் கூடினால் சித்தாந்தச் சிவநெறியை எல்லாருக்கும் உரிய இனிய திருநெறியாக இங்கு உருவாக்க முடியும்.

சித்தாந்த வித்தகர் திருத்தொண்டு வாழ்க! வளர்க! சிவாய நம!

தொண்டன்,
ஆ. நாகப்பன்,
தலைவர்
மலேசிய இந்து சங்கம்.







# முன்னுரை

நான் சென்ற ஆண்டு இந்தியாவிலிருந்து இங்கு வந்ததும் மலேசியத் திருமுறை மாணவர்கள் ஒரு சைவ சித்தாந்த உரை அரங்கை நடத்த விரும்பினார்கள். ஏப்ரல் 90-ல் மலேசியத் தலைநகராகிய கோலாலம்பூரில் அம்மாணவர்கள் திரண்டு வந்து உரை அரங்கைத் துவக்கினார்கள். அம் மாணவர்களின் தலைவராகிய ஆதிமூலம் என்னும் சைவமெய்யன்பர் முனைந்து நின்று செயலாற்றினார். அன்பர் ஆதிமூலம் திருமுறைவல்லவர்; கூட்டங்கள் நடத்துவதில் மிகவும் அனுபவம் பெற்றவர். அவர் முறையாக உரை அரங்கு நடைபெற ஏற்பாடு செய்தார். திருமுறை மாணவர்கள் அவர்க்குத் துணையாக நின்று உரை அரங்கு செவ்வனே நடைபெறுமாறு செய்தார்கள்.

காலை 9 மணிக்கு உரை அரங்கு துவங்கியது. திருமுறை ஓதலுக்குப் பின் மூன்று தலைப்புக்களில் நான் மூன்று மணி நேரம் பேசினேன். பிற்பகல் 3 மணிக்கு மீண்டும் உரை அரங்கு துவங்கியது. மேலும் மூன்று தலைப்புக்களில் மாலை 6 மணி வரை பேசினேன். பேச்சின் முடிவில், ''சந்தேகம் தெளிதல்'' என்னும் தலைப்பில் மாணவர்கள் வினாக்கள் பலவற்றை எழுப்பினார்கள். ஒரு மணிநேரம் அவர்களுக்கு விடை சொன்னேன். இரவு 7 மணிக்கு உரை அரங்கு இனிது நிறைவேறியது. 7 மணி நேரம் பேசியது எனக்கே வியப்பாக இருந்தது. இறைவன் திருவருளால் தான் இவ்வளவு நேரம் பேசியிருக்கிறேன் என உணர்ந்து அவனுக்கு நன்றி செலுத்தினேன்.

என் பேச்சை ஒலிப்பதிவு செய்திருந்தார்கள். அதனைச் சுருக்கி ஒரு நூலாக வெளியிட்டால் சித்தாந்தம் பயில்பவர்க்கு உதவியாக இருக்கும் என ஆதிமூலம் கருதினர். மாணவர்களைக் கொண்டு எழுதச் செய்து ஒரு நூலாக்கி அதனை இவ்வாண்டு வெளியாக்குகிறார்.

''நூலுக்கென்ன தலைப்புக் கொடுப்போம்?'' என ஆதிமூலம் என்னைக் கேட்டார். ''இதோ வந்து நின்றதென் மன்னுயிரே'' எனத் திருக்கோவையார் 39ம் பாட்டில் வரும் ஈற்றடி என் நினைவுக்கு வந்தது. ''இதோ'' என அதில் வரும் சொல் என்னைக் கவர்ந்ததால் இந்நூலுக்கு, 'இதோ சைவ சிந்தாந்தம்! தெரிந்துகொள்ளுங்கள்'' என்னும் தலைப்பைக் கொடுக்கச் சொன்னேன். அவரும் அதே தலைப்பில் இந்நூலை வெளியிட்டுள்ளார்.

எளிதாகச் சித்தாந்தம் சொல்வது மட்டும் என் குறிக்கோள் அன்று. ''ஆணவமலம் ஏன் உயிரைப் பற்றியது?'' ''இறைவன் ஏன் அதனைத் தடுத்திருக்கக்கூடாது'' ''எல்லாம் வல்ல இறைவன் ஏன் உயிர்களுக்கு உடனே முத்தியை வழங்கவில்லை?'' ''மூலகன்மம் என்றால் என்ன'' என்பன போன்ற அடிப்படை ஐயப்பாடுகளுக்கும் விடை அளிக்க வேண்டும் என்பது என் நோக்கம். இந்நூலில் அவற்றுக்கு இயன்ற அளவு விடை அளித்துள்ளேன்.

சித்தாந்தம் பயில விரும்புவோர் இந்நூலை முதலில் படித்தால் பின்னர் சித்தாந்த சாத்திரங்களைக் கற்பது எளிதாக இருக்கும்.

மலேசியாவில் திருமுறை அதிசயிக்கத்தக்க அளவு வளர்ச்சி கண்டுள்ளது. சித்தாந்த அறிவும் பெரிதும் பரவியிருக்கிறது. தமிழ்நாட்டில் அரசியல், சமூகப் போராட்டங்களால் திருமுறைகளும் சித்தாந்தமும் வளராமல் போய்விட்டன. மலேசியாவில் உள்ள கிராமங்களுக்குச் செல்வோர்கூடத் தமிழ் மக்கள் திருமுறை பாடுவதைக் கேட்டு மகிழலாம். தமிழ் மிகுதியும் பயிலாதவர்கள் கூடச் சித்தாந்தத் தத்துவங்களை இங்கே அறிந்திருக்கிறார்கள். தமிழ் நாட்டிலிருந்து வருகின்ற புலவர்களும், சமூக சிந்தனையாளர்களும் இங்குள்ள வளர்ச்சியைக் கண்டு பொறாமைப்படுவதை நான் நேரில் கண்டிருக்கிறேன்.

மலேசியத் திருமுறை மாணவர்களின் பணி மிகவும் போற்றுதற்குரியது; அவர்கள் ஆர்வம் சொல்லும் தரமன்று. அவர்கள் பணி மேன்மேலும் சிறக்க அம்பலவாணர் திருவருளை வேண்டுகிறேன்.

**பத்துபகாட்** | **புலவர்மணி — சித்தாந்தவித்தகர்**
*1-3-91* | முரு. பழ. இரத்தினம் செட்டியார்.



உ சிவமயம்

# சமயம் அவசியமா?

இந்தத் தலைப்புப் பொதுவானது; எந்தச் சமயத்தையும் சார்ந்த தன்று. இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கும் போது முதலில் மனிதன் எப்படி இருக்கிறான்? எனப் பார்க்க வேண்டும். மனிதன் உடம்பாக மட்டும் இருக்கவில்லை; அவனுக்கு மனமும் அறிவும் உண்டு. உடம்பு, மனம், அறிவு ஆகிய மூன்றும் சேரப் பெற்றவனே மனிதன்.

பசி, உணவு உண்டதும் தீர்ந்து விடுகிறது. இதனல் உடல் தேவை நிறைவடைகிறது. ஆனல் மனம் என்ன செய்கிறது? அந்த உணவையே வித விதமாகச் சமைத்துச் சுவைத்து உண்ண விரும்புகிறது. இது மனத் தேவை. உடலுக்காக நாம் செலவிடுவது முப்பது (30%) விழுக்காடுதான். ஆனல் மனத்திற்காக நாம் செலவிடுவது எழுபது (70%) விழுக்காடாகும். ஒரு பூனைக்குட்டி அமெரிக்கா செல்ல விரும்புவதில்லை. காரணம் அதற்கு மனவளர்ச்சி குறைவு. மனிதன் உலகம் எங்கும் சென்று பார்க்க விரும்புகின்றான், அழகான ஆடைகளையும் அணிகலன்களையும் பயன்படுத்துகிறான். கலை, இலக்கியம் இவையனைத்தையும் அறிந்து சுவைக்கிறான், இவை மனத் தேவையாகும்.

உலகம் எப்படி இருக்கிறது? சந்திர மண்டலம் எவ்வாறு இருக்கும்? அங்கே உயிர் இருக்கிறதா? நம் உடலில் உள்ள உறுப்புக்கள் எவ்வாறு வேலை செய்கின்றன? இவற்றையெல்லாம் ஆராய விரும்புவது அறிவுத் தேவையாகும். இவற்றைவிட ''நாம் யார்?'' என ஆராய்வது மிகப் பெரிய அறிவுத் தேவையாகும்.

நாம் யார்? எதற்காகப் பிறந்தோம்? நாம் இறந்தவுடன் வேறு வாழ்வு இருக்கிறதா? ஏன் இறப்பு வருகிறது? நமக்கு மேலே வேறொரு பொருள் உண்டா? இப்படிப்பட்ட ஆராய்ச்சியைத் துவங்கும் போதுதான் சமயம் நுழைகிறது. மனிதனும் விலங்கு போலப் பிறந்து, உணவு உண்டு, இனவிருத்தி செய்து இறந்து போவானனால், அவனுக்கும் விலங்கிற்கும் வேற்றுமை இல்லை. மனிதனுக்கு விலங்கிற்கு மேலான ஒரு நிலை தேவைப்படுகிறது.

சில செயல்களில் விலங்குகள் மனிதனைவிட உயர்ந்தவையாக இருக்கின்றன.

ஒரு காக்கை பொதுவாக மக்கள் உணவிடும்போது ''கா-கா'' எனக் கரைந்து தன் இனத்தை அழைத்துக் கலந்து உண்கிறது. ஆனால் ஒரு வடையைத் திருடி உண்ணும் போது அது கரைவதில்லை. அமைதியாக மரத்தின் கிளை மீதிருந்து உண்கிறது. திருட்டுச் சொத்தைத் தர்மம் செய்யக்கூடாது என்னும் எண்ணம் அதற்கு இருப்பது போலத் தோன்றுகிறது.

ஒரு பசு கருவுற்றிருக்கும் போது காளை அதனை நோக்குவது இல்லை. யானைகளிடையே ஓர் அதிசயமான பழக்கம் உண்டு. பெண் யானை பிரசவிக்கும் போது அதனைச் சுற்றி வேறு பெண் யானைகள் மட்டுமே நிற்கும். ஆண் யானை தூரத்திற்குச் சென்றுவிடும்.

விலங்குகளும் பறவைகளும் சில குணங்களில் மிகவும் உயர்ந்து இருந்தாலும், தமக்கு மேலே ஒரு பரம்பொருள் உண்டு என்று அவற்றுக்குத் தோன்றுவதில்லை. இவ்வுணர்வு மனிதனுக்கு மட்டுமே தோன்றுகிறது. ஒரு குழந்தை எதைப் பார்த்தாலும், ''இது என்ன?'', ''அது என்ன?'' என்று கேள்வி கேட்டுக் கொண்டேயிருக்கும். ஆனால் ஒரு கோவிலுக்கு அழைத்துச் சென்று, ''சுவாமி காப்பாற்றுவார், கும்பிடு'' என்று சொன்னால், உடனே கும்பிடத் துவங்கிவிடும். அதிகம் கேள்விகள் கேட்காது. இதிலிருந்து கடவுள் உணர்ச்சி மனிதப் பிறப்பிற்கு இயல்பாக உண்டு என்பது தெரிய வரும்.

தனக்கு மேல் பரம்பொருள் ஒன்று உண்டு என்றுணர்ந்து, வழிபாடு செய்வதுதான் மனிதனுக்குரிய சிறப்பொழுக்கமாகும். இவ்வழிபாடு இல்லையென்றால் மனிதனுக்கும் விலங்குக்கும் வேற்றுமை இல்லாது போய்விடும்.

சிவஞான சித்தியாரில்,

*''மானிடப் பிறவி தானும் வகுத்தது மனம், வாக்குக்காயம்*
*ஆனிடத்து ஐந்துமாடும் அரன்பணிக்காக அன்றோ?''*

எனச் சொல்லப்பெற்றுள்ளது.

மானிடப்பிறவி எடுத்ததே இறைவழிபாட்டிற்காகத்தான் என்பது இதன் கருத்தாகும்.

''மனித சமுதாயத்தை வறுமை பிணி இல்லாமல் உயர்த்தினால் போதும்; கடவுள் வழிபாடு தேவையில்லை'' எனச்சிலர் சொல்லுகின்றனர். இது கேட்பதற்கு இனிமையாகத்தான் இருக்கின்றது. நடைமுறைப் படுத்தும் பொழுதுதான் கடவுள் உணர்ச்சி எவ்வளவு அவசியம் என்பது புலனாகிறது.



சமுதாயப் பணிகளில் ஈடுபடுவோர் நல்லொழுக்கம் வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும். இல்லையேல், பதவி வெறியும் அதிகார வெறியும் அவர்களை ஆட்கொண்டுவிடும். அவர்கள் மக்களை அடக்கி ஆளவே நினைப்பார்கள். அவர்களை எதிர்த்துப் புரட்சி செய்பவர்களும் அப்போது தோன்றுவார்கள். எனவே சமுதாயத்தில், குழப்பம் நிலவுமேயன்றி அமைதி நிலவாது. சமுதாயம் நன்னிலையில் இருக்க வேண்டுமேயானால் பாவ, புண்ணிய உணர்ச்சி உள்ளவர்களே தலைவர்களாக வர வேண்டும். சமய உணர்ச்சி உள்ளவர்களுக்குத்தான் பாவ புண்ணிய உணர்ச்சி தோன்றும். தமக்கு மேலே ஒரு தெய்வீக சக்தி இருந்து கண்காணிக்கிறது என எண்ணும் எண்ணம் இருந்தால்தான் தலைவர்கள் பாவத்திற்கு அஞ்சிச் சமுதாயத்தைச் செம்மையாக நடத்திச் செல்வார்கள். சமய உணர்ச்சி இல்லாத தலைவர்களை யார் திருத்துவது? சூழ்ச்சியும் திறனும் உடையவர்களாக இருந்தால் அவர்களை யாரும் திருத்த முடியாது.

பெரிய பாவங்களைச் செய்வதற்குச் சிலர் பயப்படுவதற்குக் காரணம் என்ன? கடவுள் உணர்ச்சி அவர்களுக்கு இயல்பாக இருப்பதே காரணம் ஆகும்.

சமயம் மனிதனின் ஒழுக்கத்தை உயர்த்துகிறது. எல்லா மதங்களும் ஒழுக்கத்தைப் போதிக்கின்றன. மதம் சாராப் பள்ளிக்கூடங்களில் "MORAL TEACHING" அதாவது ''ஒழுக்கக் கல்வி'' போதிக்கப்படுவதுண்டு. வெறும் ஒழுக்கத்தை மட்டும் போதித்தால் சோதனை வரும் பொழுது மனிதன் அதனைக் கைவிட்டு விடுவான். தனக்கு மேல் உயர்ந்த சக்தி ஒன்று உண்டு என்னும் எண்ணம் இருந்தால்தான் சோதனையைத் தாங்கும் வலிமை வரும். தனக்கு மேல் ஒரு சக்தி இல்லையென்று நினைத்தால் மனிதன் நெருக்கடி நிலையில் தாறுமாறாகச் செயல்படத் துவங்கிவிடுவான். தன் செயலுக்கு ஏதேனும் ஒரு போலிச் சமாதானத்தைக் கூறி நியாயப்படுத்த முயல்வான். இறை நம்பிக்கை இல்லாத ஒழுக்கக் கல்வி நிலைக்காது.

சட்டம் போட்டு ஒழுக்கத்தைக் காப்பாற்ற முடியாது. சட்டத்தில் உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்திக் கொண்டு மனிதன் தப்ப முயல்வதை நாம் அன்றாடம் காண்கின்றோம். இறை உணர்ச்சி இருந்தால் தனிமையிலும் தவறு செய்ய மனிதன் தயங்குவான். இதனாலேயே ''கடவுள் இல்லாத ஒழுக்கம் கண்ணில்லாத குதிரையில் முடவன் செய்கின்ற சவாரி'' என அறிஞர்கள் கூறுகின்றனர்.

மனிதன் நல்லவனுக வாழ வேண்டுமென்ருல் சமயம் வேண்டும். ''உன் மனைவியை நேசி'' - ''அவளிடம் உண்மையாக நடந்து கொள்'', போன்ற அன்பு உணர்வுகளைச் சமயம்தான் போதிக்கும், சட்டம் போதிக்காது. ''மனைவியைப் பிடிக்காவிட்டால் விவாகரத்து செய்து-கொள்'', என்றுதான் சட்டம் சொல்லும். அமெரிக்காவில் விவாகரத்து அதிகம் நடப்பதற்குக் காரணம் ஆழமான சமய உணர்ச்சி இல்லாமையே என அந்நாட்டுச் சமூக அறிஞர்கள் இப்போது சொல்லுகின்றனர்.

போதைப்பொருள் பழக்கத்தையும் குடிப்பழக்கத்தையும் நீக்குவதற்குச் சமயம் பெரிதும் துணை செய்யும். கொலை, களவு முதலியன இப்பொழுதும் நடைபெறுகின்றன. சமய உணர்ச்சி இல்லையென்ருல் அவை இன்னும் மிக அதிகமாக நடைபெறத் துவங்கும்; மனிதன் கொடிய விலங்குகளை விட மோசமாகி விடுவான்.

சிலர், ''நாங்கள் திருக்குறள் நெறியில் வாழ்கிறோம், சமய உணர்ச்சி தேவையில்லை'', எனச் சொல்கின்றனர். வள்ளுவர், ''அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை'', எனக் கூறுகிருர். ஒழுக்கத்தை மட்டும் அவர் போதிப்பவராய் இருந்தால் அருளைப்பற்றியும் அவ்வுலகத்தைப்பற்றியும் அவர் பேசியிருக்க வேண்டியதில்லையே?

*''தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்*
*மனக்கவலை மாற்றல் அரிது.''*

என்பது வள்ளுவர் வாக்கு. இறைவனை அடைந்தாலன்றி மனிதன் மனக் கவலையை மாற்றிக்கொள்ள முடியாதென இந்தக் குறள் தெளிவாகச் சொல்லுகிறது. திருக்குறளில் இம்மை, மறுமை, அம்மை ஆகிய மூன்றும் பேசப்பட்டுள்ளன. ''இன்சொல் இம்மையும் மறுமையும் இன்பம் தரும்'', என அவர் சொல்லுகிருர். ''மற்று, ஈண்டு வாரா நெறியென'' அம்மையைப் பற்றி அவர் பேசுகிருர்.

திருக்குறளில் கோயில் பற்றிய சிந்தனை இல்லையெனச் சிலர் சொல்கிருர்கள். ''சிறப்பொடு பூசனை செல்லாது'' என்னும் குறளில் திரு-விழாக்கள் ஆகிய சிறப்புப் பூசைகளையும் நாடோறும் நடக்கும் நித்திய பூசனைகளையும் அவர் பேசியிருக்கிருர். எனவே திருக்குறள் நல்ல ஒரு சமய நூல் என அறிந்துகொள்ள வேண்டும்.

தமிழ் நாட்டுச் சமயங்கள் மட்டுமல்லாமல் வேற்று நாட்டுச் சமயங்களும் அன்பையும் ஒழுக்கத்தையும் வலியுறுத்திப் பேசுகின்றன.

''உன் சிநேகிதன் வாழ வேண்டும் எனப் பிரார்த்திப்பதில் சிறப்பில்லை; உன் பகைவன் வாழ வேண்டும் எனப் பிரார்த்தி'' என்று ''பைபிளில்'' சொல்லியிருக்கின்றது.



சைவம், வைணவம், சமணம், பௌத்தம், கிறிஸ்துவம் முதலிய எல்லாச் சமயங்களும் கருணை இருந்தால்தான் மனிதன் மனிதனுக வாழ்வான் எனக் கூறுகின்றன.

ஞானசம்பந்தர் சமணர்களை எதிர்த்துப் பாடும் போது கூட, ''ஆழ்க தீயது'' எனத்தான் சொல்லுகின்ருர். ''தீமை ஒழியட்டும்'' என்று சொன்ருரே அன்றித்'' ''தீயவர்கள் ஒழியட்டும்'' எனச் சொல்லவில்லை. தீயவர்களை மன்னிப்பதுதான் உண்மையான சமயமாகும்.

வான்மீக இராமாயணத்தில் மன்னிப்புப்பற்றி சீதை சொன்ன ஒரு செய்தியை இங்கே சொல்லுகின்றேன். இராமர், ''இராவணன் இறந்து விட்டான்'' என்னும் செய்தியை அனுமார் வாயிலாகச் சீதைக்குச் சொல்லி அனுப்புகிருர். அனுமார் சென்று செய்தியைச் சொல்லிவிட்டு, ''இந்த அரக்கிகள் எல்லாரும் உன்னைக் கொடுமைப்படுத்தி இருக்கிருர்கள்; அவர்களை இப்பொழுது கொல்ல அனுமதி தரவேண்டும்'' எனச் சீதையை கேட்கிருர். அதற்குச் சீதா பிராட்டியார் ஒரு கதை மூலம் விடை-யளிக்கிருர்.

''ஒரு காடு; அங்கே ஒரு வேடன்; அவனை ஒரு புலி துரத்தியது. அவன் பயந்து ஒரு மரத்தில் ஏறினுன். அங்கே ஒரு கரடி இருந்தது. அதனைக் கண்டு அவன் கலங்கினுன். அப்பொழுது கரடி அவனைப் பார்த்துப், ''பயப்படாதே, நாமிருவரும் ஒற்றுமையாகச் செயல்படு-வோம்'', எனக் கூறியது. வேடன் ''சரி'' என்ருன். இருவரும் மரத்தில் தங்கியிருந்தார்கள். சிறிது நேரத்தில் வேடனுக்குத் தூக்கம் வந்தது. கரடி அவனைப் பாதுகாப்பாகப் பிடித்துக்கொள்ள வேடன் அதன் மடியில் படுத்துத் தூங்கினுன். அப்பொழுது புலி கரடியைப் பார்த்து ''வேடனைக் கீழே தள்ளிவிடு; நான் சாப்பிட்டதும் போய்விடுகிறேன்; நீ தப்பலாம்'' என்றது. அதற்குக் கரடி ''நான் துரோகம் செய்ய முடியாது'' எனச் சொல்லி மறுத்துவிட்டது. சிறிது நேரம் சென்றதும் வேடன் விழித்துக் கொண்டான். கரடி அவன் மடியில் படுத்துக்கொண்டு தூங்கியது. புலி இப்பொழுது மனிதனிடம் கரடியிடம் கூறியது போலக் கூறியது. ''இது-தான் சரியான திட்டம்'' என அந்த வேடன் எண்ணிக் கரடியை உருட்டி-விட்டான். ஆனுல் கரடி மரக்கிளையைப் பிடித்துக்கொண்டு மறுபடியும் ஏறிவிட்டது. வேடன் பயந்தான். அதற்குக் கரடி, ''நீ துரோகம் செய்து விட்டாய். இருந்தாலும் உன்னை மன்னிக்கிறேன்'' என்றது. ''தனக்குத் துரோகம் செய்த மனிதனை ஒரு கரடி மன்னித்திருக்கும் பொழுது, எனக்குத் துரோகம் செய்த இந்த அரக்கிகளை நீ ஏன் மன்னிக்கக் கூடாது?'' எனச் சீதா பிராட்டியார் அனுமாரிடம் வினவினுர்.

மன்னிப்பு எவ்வளவு பெரிய தத்துவம் என்பதை இந்தக் கதை மூலம் இராமாயணத்தில் உணர்த்தி இருக்கிறார்கள். ஆனால் இப்பொழுதோ மனிதன் தனக்கொருவன் துரோகம் செய்தால் அவனைத் தீர்த்துக்கட்டி விடுகிறேன் என்றுதான் சொல்லுகிறான். மன்னிக்கின்ற உயரிய குணம் சமய நம்பிக்கை உள்ளவர்களுக்குத்தான் உண்டாகும்.

''சமயத்தின் பெயரால் எத்தனையோ போர்களும் ஊழல்களும், ஏமாற்றுதல்களும் நடக்கின்றனவே?'' என வினவலாம். எந்த ஒரு சமயமும் ''எதிரியை அடித்துக் கொல்'' என்று சொல்லவில்லை. ''உன் எதிரியாக இருந்தாலும் அவனை வாழவிடு'' என்றுதான் சொல்கிறது. அன்பு, அருள், பொறுமை ஆகியவற்றையே சமயங்கள் போதிக்கின்றன. வன்முறைகளைப் பற்றியும் சில இடங்களில் அவை பேசியுள்ளன. கூர்ந்து ஆராய்ந்தால் அன்பே சமயத்தின் அடிப்படை என்பது புலப்படும். தவறாகப் பொருள் செய்வது நம் குற்றமேயன்றிச் சமய நூல்களின் குற்றம் அன்று.

அப்படியானால் போர் ஏன் நடக்கின்றது? எனச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சமயப் போர்வையில் அரசியலும், பொருளாதாரமும், அதிகார வெறியும் புகுந்து விளையாடுவதே போர் நடப்பதற்குக் காரண மாகும்.

விஞ்ஞான நூற்களோ, பொருளாதார நூற்களோ, பூகோள நூற்களோ ஒழுக்க நெறியைப் போதிப்பதில்லை.போதிக்க வேண்டிய அவசியமும் அவற்றுக்கில்லை. ஒழுக்கத்தை மட்டும் போதிக்கும் நூற்கள் சமயநூற்களில் இருந்தே அவற்றைக்கடன் வாங்கி இருக்கின்றன. பொருளும், விஞ்ஞானமும், அதிகாரமும் சமய உணர்ச்சி இல்லாவிட்டால் கேட்டையே விளைவிக்கும். நாத்திகர்களும் சமய ஒழுக்கங்களையே கடவுளை மட்டும் நீக்கிவிட்டுப் போதிக்கின்றனர். அவர்களும் சோதனை நேரும் பொழுது, ''மனச்சாட்சியே துணை'' என்கின்றனர். அது மற்றொரு வகையில் கடவுளை ஒப்புக்கொள்வதே ஆகும். கடவுள் இருக்கிறார் எனச் சொல்வதே மூட நம்பிக்கை என வைத்துக் கொண்டால் கூட அந்த நம்பிக்கைதான் ஒழுக்கத்தை நிலை நிறுத்தத் துணை செய்யும்.

தனிப்பட்ட மனிதன் தோல்வி அடையும் பொழுது அவன் ஆறுதல் பெறக் கடவுள் நம்பிக்கை அவசியமாகும். அந்த நம்பிக்கை இல்லாவிட்டால் தோல்வி கண்ட மனிதன் விலங்காக மாறி எதனையும் செய்யத் துணிந்து விடுவான்.



ஆன்ம முன்னேற்றம், மனித வாழ்க்கையில் இன்றியமையாத ஒன்றாகும். பரம சமாதி நிலையில் இறைவனோடு ஒன்றிப் பேரின்பத்தை அனுபவிப்பதுதான் மனித வாழ்வின் கடைசிக் குறிக்கோளாகும். இறந்து போகின்ற மனிதன், எல்லை இல்லாத ஓர் இன்ப வாழ்க்கை தனக்குப் பின்னே உண்டு என்பதை அறிந்து கொள்வதுதான் உண்மையான அறிவாகும்.

ஒழுக்க நெறி சமயத்தை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. சமயம் இல்லாமல் உலகில் அமைதியை உண்டாக்குவதற்காக எந்த ஒரு புதிய தத்துவத்தைச் சொன்னாலும், அஃது இறுதியில் சமயத்தில்தான் போய் முடியும். தனிப்பட்ட மனிதன் அமைதி பெற்றால்தான் சமுதாயமும் அமைதி பெறும். சமயம் வேண்டாமெனச் சொல்பவர்களும், அமைதி பற்றிப் பேசும் பொழுது, அன்பு, அருள், அடக்கம், உண்மை முதலிய சமய தத்துவங்களைத்தாம் எடுத்துச் சொல்கிறார்கள். சமயத்தின் பெயரால் நடக்கும் ஊழல்களைக் கண்டிப்பதில் தவறில்லை. ஆனால் அதற்காகச் சமயமே வேண்டாமெனச் சொல்வது முழுத் தவறாகும்.

---

# கடவுள் உண்டா?

உலகத்திலேயே கடவுள் உண்டா? என்னும் ஆராய்ச்சியை முறையாகச் செய்வது சைவ சமயம் ஒன்றுதான். ஏனையச் சமயங்கள் நம்பிக்கையைத்தான் வலியுறுத்துகின்றன. சைவ சிந்தாந்தமும் நம்பிக்கை அவசியம் வேண்டுமென்றே கூறுகிறது. ஆனல், சைவ சித்தாந்தம் மனிதனுக்கு அறிவு இருப்பதால் கடவுளை நேரடியாக உணர்த்த முடியாவிட்டாலும் அவர் இருக்கிறார் என்னும் உண்மையை அறிவியல் வழியில் நிலைநாட்டலாம் எனக் கருதுகிறது. இதனுலேயே சிவஞானபோத முதல் சூத்திரம் கடவுள் உண்மை பற்றிப் பேசுகிறது.

''*அவன், அவள் அது எனும்*
*அவை மூவினைமையின் தோற்றிய திதியே*
*ஒடுங்கி மலத்துளதாம் அந்தம் ஆதி*
*என் மனுர் புலவர்*'' என்பது முதற் சூத்திரம்.

இதனைச் சிவஞான சித்தியாரில் வரும் ''ஒருவனேடு ஒருத்தியொன்றென் றுரைத்திடும் உலகமெல்லாம், வரு முறை வந்து நின்று போவதும் ஆதலாலே, தருபவன் ஒருவன் வேண்டுந் தான்முத லீறு மாகி மருவிடும் அநாதி முத்த சித்துரு மன்னி நின்றே'' என்னும் பாடல் விளக்குகிறது. சிவஞான போதத்திற்குப் பாட்டால் உரை கண்ட நூல்தான் சிவஞான சித்தியாராகும்.

உலகம் ஆண், பெண், அது என மூவகையாகக் காணப்படுகிறது. கல், மண், நெருப்பு, சூரியன், சந்திரன், விலங்குகள், பறவைகள் எல்லாமே தோன்றுகின்றன. சில காலம் இருக்கின்றன, பின்னர் அழிகின்றன. மனிதன் ஆணுகவோ பெண்ணுகவோ பிறக்கின்றான்; வளர்கின்றான்; இறந்து போகின்றான். இவற்றை இயக்குவதற்கு அதாவது தோற்றுவித்து நிறுத்திப் பின்னர் அழிப்பிப்பதற்கு ஒருவன் வேண்டும் என்பதை சித்தியார் ''தருபவன் ஒருவன் வேண்டும்'' எனச் சொல்கின்றது.

தோன்றுவது ஆக்கச்சக்தி; சில காலம் நிற்பது காப்புச்சக்தி; அழிந்து போவது அழிப்புச் சக்தி: ஒன்றுக்கொன்று முரணுன சக்திகள் இயற்கையில் காணப்படுகின்றன. இம்மூன்றும் இயற்கையில் இயல்பாகவே அமைந்து கிடக்கும் எனச் சொல்வது பொருத்தமாக இல்லை.

''*இயல்புகாண் தோற்றி மாய்கை யென்றிடில் இயல்பினுக்குச்*
*செயலதின் றியல்பு செய்தி; செய்தியேல் இயல்பதின்ரும்*''



எனச் சித்தியாரில் வரும் பாடலை நாம் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஒரே விதமாக இயங்கினல்தான் அஃது இயல்பு எனச் சொல்லப்படும். செயல்மாறினல் விகாரமென்று கூறப்படும். இயல்புக்கு விகாரம் இருக்க முடியாது. தோன்றுதலும் அழிதலும் ஒன்றுக்கொன்று விகாரம். இயல்பு என்ருல் தோன்றிக் கொண்டேயிருக்க வேண்டும்; அழியக் கூடாது, அல்லது அழிந்து கொண்டே இருக்க வேண்டும் தோன்றக் கூடாது. ஆனல் உலகில் ஒன்றுக்கொன்று முரணுன சக்திகள் வேலை செய்வதைப் பார்க்கின்ரேம்.

இரு முரணுன சக்திகளும் இயற்கையிலேயே உள்ளன என்று விவாதத்திற்காக வைத்துக் கொள்வோம். தோற்றுவிக்கின்ற சக்தி கூடுதலான வலிமையுள்ளதாக இருந்தால் அழிக்கின்ற சக்தியை அது செயல் படவிடாமல் தடுத்துவிடும். அழிக்கின்ற சக்தி கூடுதலாக இருந்தால் தோற்றுவிக்கின்ற சக்தியை நிறுத்திவிடும்.

இரண்டும் சமமாக இருந்தால் தோன்றுதல் அழிதல் இரண்டுமே நடைபெருமல் போகும். ஆனல் உலகில் தோன்றுதலும் அழிதலும் எப்பொழுதும் நடப்பதைப் பார்க்கின்ரேம். இரண்டு சக்திகளையும் மாறி மாறிச் செயல்படுத்த இயற்கையால் முடியாது. ஏனெனில் அஃது அறிவற்ற சக்தியாகும். அறிவற்ற சக்தி தன்னுள் இருக்கின்ற இரண்டு சக்திகளையும் எப்போதும் வெளிப்படுத்திக் கொண்டுதான் இருக்கும். அறிவுள்ள சக்தியாக இருந்தால்தான் ஒன்று நடைபெறும் போது மற்ருென்றை அது நிறுத்தி வைக்கும்.

ஒரு காந்தக் கல்லுக்கு முன்னல் ஓர் இரும்பைப் பிடித்துக் காட்டினல் அந்தக் காந்தக் கல் இரும்பைப் பிடித்துக் கொள்ளும். அதே நேரம் இரண்டிற்கும் இடையில் ஒரு பலகையை வைத்து விட்டால் காந்தக் கல் தன் பிடியை விட்டு விடும். காந்தக் கல் ஒரு புறம் வாளா கிடக்கும்; இரும்பு மற்ருெரு புறம் வாளா கிடக்கும். எவ்வளவு நாளானுலும் இப்படியேதான் கிடக்கும். பலகையை அகற்றும் ஆற்றல் இரண்டிற்கும் இல்லை. இதுபோலத் தோற்றுவித்தல், அழிப்பித்தல் ஆகியவற்றை மாறி மாறி நடத்த இயற்கைக்குத் தெரியாது.

ஒரு வீட்டில் வாழ்ந்த முருகன் என்பவன் அடுத்த வீட்டு வள்ளியைக் காதலித்தான். இருவரின் பெற்ருேரும் அவர்களைத் தடுத்தனர். காதலர் இருவரும் உயரம் இல்லாமல் இருந்த அவர்கள் வீட்டின் சுவரின் வழி, எட்டி எட்டிப் பார்த்துக்கொண்டனர். இதனைத் தடுக்கும் பொருட்டுப் பெற்ருேர்கள் அந்தச் சுவரை உயர்த்தி விட்டனர். இருவரும் ஒருவரை-

யொருவர் பார்க்க முடியவில்லே. ஆனுல் வள்ளியும் முருகனும் ''காந்தக் கல் - இரும்பு'' போன்று அறிவற்றவர்கள் அல்லர். சில நாட்களுக்குப் பிறகு சுவரில் ஒரு துவாரத்தை உண்டாக்கி இருவரும் பார்த்துக் கொண்-டனர். அறிவு இருந்ததால்தான்அவர்கள் இவ்வாறு செய்தனர். அறிவு இல்லாவிட்டால் சுவரில் துவாரம் உண்டாகியிராது.

இயற்கைக்கு அறிவில்லாததால் தோற்றுவித்தலேயும் அழிப்பித்தலே-யும் மாறி மாறிச் செயல்படுத்த அதனுல் முடியாது. அவ்வாறு செயல் படுத்த அறிவுள்ள ஒரு பொருள் இருந்தாக வேண்டும். அந்த அறிவுள்ள பொருளுக்குத்தான் கடவுள் என்று பெயர். இயற்கைக்கு அறிவு இருக் கிறது என்று ஒப்புக் கொண்டால் அதுவே கடவுளாகிவிடும். ஆனுல் இயற்கைக்கு அறிவிருப்பதாக நாத்திகர்களும் ஒப்புக் கொள்வது இல்லே; ஆத்திகர்களும் ஒப்புக் கொள்வது இல்லே. எனவே, இயற்கை வேறு; அதனே இயக்குகின்ற அறிவுடைய பொருள் வேறு என்றுதான் நாம் முடிவு காண வேண்டியதிருக்கிறது. இயற்கையில் பொருட்களேத் தோற்றுவிக்கவும் அழிப்பிக்கவும் அறிவுள்ள பொருள் ஒன்று இருந்தாக வேண்டும் என்பதால்தான், சித்தியார், ''தருபவன் ஒருவன் வேண்டும்'' என்று சொல்கிறது.

எல்லாப் பொருட்களும் அழிவதால் இவற்றைத் தோற்றுவித்து நிறுத்தி அழிப்பதற்கு என்றும் அழியாத ஒரு பொருள் இருக்க வேண்டும். சூரியன், சந்திரன் போன்றவை அழிவதை நாம் பார்க்கவில்லேயே என வினவலாம். மனிதன் இறப்பதை நாம் பார்க்கிருேம் ஏனெனில் அவன் ஒரு குறிப்பிட்ட காலம் வரை தான் வாழ்கிருன். சூரியன், சந்திரன் முதலியவை நீண்ட காலத்திற்கு இருப்பதால் அவற்றின் அழிவை நாம் பார்க்க முடியவில்லே. விஞ்ஞான சாத்திரம் சூரியன், சந்திரன் முதலியவை ஒரு காலக்கட்டத்தில் அழிந்து விடும் எனத் தெளிவாகக் கூறுகின்றது. அதன் முடிவை மறுத்தால் நாம் பகுத்தறிவாளர்களாக இருக்க முடியாது. சூரியன் பல இலட்சம் ஆண்டுகள் கழிந்ததும் தன் சக்தியை இழந்து விடும் என விஞ்ஞான ஆய்வு கூறுகிறது. கல்லும் மண்ணும் இற்றுப்போய் ஒரு காலத்தில் அழிந்துவிடும். தங்கம் எண்-ணூறு வருடங்களுக்கு ஓர் அவுன்ஸ் அழியும். "There is a change in every-thing" ''ஒவ்வொரு பொருளிலும் மாறுதல் உண்டாகும்'' என்பது விஞ்ஞானம் கண்ட உண்மையாகும். மாறுதல்கள் நடப்பதால்தான் மாருத கடவுள் ஒருவர் இருக்க வேண்டும் எனக் கூறுகிருேம்.

ஒரு பள்ளிக்கூடப் பையன் தனக்குப் புரியும்படியாக இறைவன் உண்டு என்பதை விளக்கச் சொன்ஞன். ''உன் அப்பா எப்படித் தோன்-றிஞர்?'' என நான் அவனேக் கேட்டேன். ''அவர் அப்பா அவரைத்



தோற்றுவித்தாரென'' விடை சொன்ஞன். இப்படியே பார்த்துக் கொண்டு போனுல், ''முதல் அப்பா எப்படி தோன்றியிருப்பார்?'' என்று கேட்டேன். சிறிது நேரம் சிந்தித்துப் பார்த்து விட்டு ''அந்த அப்பா ஒருவரிடமிருந்து தோன்றிஞரென்ருல் அந்த ஒருவர் எப்படித் தோன்றி-ஞர் எனக் கேள்வி பிறக்கும்; ஆதலால் முதல் அப்பா யாரிடமிருந்தும் தோன்ருதவராய் இருக்க வேண்டும்'' என்று அவன் விடை சொன்ஞன். இதனேத்தான் சைவ சித்தாந்த நூலாகிய திருக்களிற்றுப்படியார், ''உலகிற்கு அம்மையப்பரே அம்மையப்பர்'' எனச் சொல்லுகிறது.

முதல் முதல் ஒரு தோற்றம் வேண்டுமென்ருல் அதற்கு முன் தோற்ற-மில்லாத ஒன்று இருந்தாக வேண்டும். அஃது என்றும் உள்ளதாக இருக்க வேண்டும். அப்படி என்றும் உள்ள ஒரு அழியாத நித்தியப் பொருள் இல்லாவிட்டால் அழிதலுக்கு உட்படுகின்ற இந்த உலகப் பொருட்கள் தோன்றியிருக்க முடியாது. உலகப் பொருட்கள் தோற்றமில்லாதவை-யென்ருல் அவை அழியாமல் இருக்க வேண்டும். அவை அழிவதை நாம் நேரே பார்ப்பதால் அவை தோற்றமுள்ளவையே ஆகும். இதனுல், உலகம் என்றும் உள்ளது என்னும் கொள்கை அடிபட்டுப் போகிறது. தோன்றுதலுக்கும் அழிதலுக்கும் உட்படுகின்ற உலகம் தோன்ருததாயும் அழியாததாயும் உள்ள ஒரு மூலப் பொருளாலேயே தோற்றுவிக்கப் பட்டிருக்க வேண்டும். உலகம் இயற்கையென்பது அதன்கண் உள்ள பொருட்கள் யாவும் அழிவதால் பொருந்தாமல் போகிறது. அழியாத ஒரு மூலப் பொருள் இருந்தால்தான் இவை தோன்ற முடியும். அழியாத மூலப் பொருள் தோற்றமுள்ளதாக இராது. அந்த மூலப்பொருளேத் தான் நாம் கடவுள் என்று சொல்வதால் கடவுளே யார் உண்டாக்கிஞர்? என்னும் கேள்வி பொருளற்றுப் போகிறது.

கடவுளே ஒருவர் உண்டாக்கிஞர் என்ருல் அந்த ஒருவரை யார் உண்-டாக்கிஞர் என்னும் கேள்வி பிறக்கும். இப்படியே ஆராய்ந்து பார்த்தால் முடிவில் யாராலும் உண்டாக்கப்படாத ஒருவர் இருந்தாக வேண்டும் என்றும் அவரைத் தான் நாம் கடவுள் என்று கூறுகிருேம் என்றும் அறிந்து கொள்வோம்.

அணுக்கள் இயங்கிக் கொண்டே இருக்கின்றன. அவை கூடும்போது பொருள் தோன்றுகிறது; பிரியும் போது பொருள் அழிகிறது. ஒன்றுக் கொன்று நேர் விரோதமான இச்செயல்கள் தாமே நடைபெற முடியா-தென்பதை முன்னர் விளக்கியிருக்கிருேம். விஞ்ஞான சாத்திரமும் ஒரு மூல இயக்கம் இருந்தாக வேண்டும் என்றே கூறுகிறது.

முதலில் ''0''இருந்தால் எப்படித் தோற்றம் வரும்? ''1'' இருந்தால் தான் அதனருகே 0 போட்டு 10, 100, 1000 என்று சொல்லலாம். ஏனவே சூனியத்திலிருந்து ஒன்று தோன்றுகிறது என்பது அபத்தம்.

நாத்திகர்கள் இறந்தவர்களை ''இயற்கை எய்தினார்கள்'' என்று சொல்லுகிறார்கள். ''காலமானார்கள்'' என்றோ ''எமலோகமோ சிவலோகமோ சென்றார்கள்'' என்றோ சொல்வதில்லை.

''இயற்கை எய்துதல்'' என்றால் எல்லாரும் ஒரு குறிப்பிட்ட வயதில் இறக்க வேண்டும். மக்கள் அனைவரும் நூறு வயதில் இறந்தால் அதனை ''இயற்கை எய்துதல்'' என்று சொல்லலாம். ஆனால், ஆறிலும் சாவு வருகிறது; நூறிலும் சாவு வருகிறது, இதனை இயற்கை என்று எப்படிச் சொல்லுவது? சித்தியாரில் இதனாலேயே ''இயல்பினுக்குச் செயலதின்று'' என்று கூறியிருக்கின்றார். மரணம் பல்வேறு வகையில், பல்வேறு காலத்தில் நிகழ்கிறது. பிறவிலேயே நோயுள்ளவர் எண்பது ஆண்டுகளை ஓட்டிவிடுகின்றார்.

ஆரோக்கியமானவர் திடீரென்று நாற்பது வயதிலேயே இறந்து போகிறார். மரணம் நம் பூர்வ வினைகளின் அடிப்படையில் கடவுளால் நிகழ்த்தி வைக்கப்படுகிறது என்று சொல்வதே பொருத்தமாக இருக்கும்.

இந்த உடலுக்குரிய வடிவத்தை அமைக்க ஓர் அறிவுடைப் பொருள் வேண்டும். இயற்கை அறிவற்றதாதலால் வெவ்வேறு வடிவங்களில் உடலை அது படைக்க முடியாது. சாப்பிடுகின்ற உணவு உணவுக்குழாய் வழியாகச் சென்று, செரித்து பற்பல சத்துணவுகளாக மாறுவது ஒரு பெரிய தொழிற்சாலை வேலையாகும். திட்டமிடாமல் ஒரு தொழிற்சாலையை யாரும் அமைக்க முடியாது. அறிவற்ற இயற்கைக்கு இப்படிப் பட்ட திட்டத்தோடு கூடிய ஒரு தொழிற்சாலையை அமைக்கும் திறன் இல்லை. நம் உடல் போன்ற நுணுக்கமான ஒரு தொழிற்சாலையை அறிவுப் பொருள் ஆகிய இறைவன்தான் அமைத்திருக்க வேண்டும்.

நாம் பிராணவாயுவை உட்கொள்கிறோம். கரியமலவாயுவை வெளிப்படுத்துகிறோம். கரியமலவாயுவைத் தாவரங்கள் உட்கொண்டு பிராணவாயுவை நமக்குத் தருகின்றன. இதில் மாறுதல் ஏற்பட்டால் நாம் இறந்து போவோம். நமக்குப் பிராணவாயு வேண்டுமென்றும் தாவரங்களுக்குக் கரியமலவாயு வேண்டுமென்றும் இயற்கைக்கு எப்படித் தெரியும்? இயற்கையில் நடப்பதென்றால் நாமும் தாவரங்களும் ஒரே விதமான காற்றைத்தான் உட்கொள்ள வேண்டும். மாறான காற்றை உட்கொள்வதால் திட்டமிடப்பட்ட இந்த அமைப்பு அறிவுடைப் பொருளான இறைவனால்தான் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பது புலனாகிறது.



'அமீபா என்னும் சிற்றுயிரில் ஆண் பெண் வேற்றுமை இல்லை. அது தன்னிலே தன் இனத்தைப் பெருக்கிக் கொள்கிறது. ஆனால், மற்ற உயிரினங்கள் அனைத்திலும் மரம் செடிகள் உட்பட ஆண் பெண் வேற்றுமை உண்டு. சார்லஸ் டார்வினின் பரிணாம வளர்ச்சிச் சித்தாந்தத்தில் இவ்வாறு ஆண் பெண் வேற்றுமை தோன்றியதற்குக் காரணம் கூற முடியவில்லை. ஓர் ஆணும் பெண்ணும் சேர்ந்துதான் இன விருத்தி செய்ய வேண்டுமென இயற்கை விதித்திருக்க முடியாது. அமீபாவில் நிகழ்வது போலத் தன்னிலே தான் உற்பத்தி ஆவதைத்தான் அது செய்திருக்க முடியும். இருவர் சேர்க்கையால்தான் உற்பத்தி நிகழ வேண்டுமென இயற்கைக்குத் திட்டமிடத் தெரியாது. ''திட்டமிடுதல்,'' ''வழிவகுத்தல்'' ஆகியவை ஓர் அறிவுள்ள பொருளின் செயலாகவே இருக்க வேண்டும். மேல்நாட்டு விஞ்ஞானி ஒருவர் இவ்வாறு சிந்தித்துக் கடவுள் உண்மையை நிலைநாட்டியுள்ளார்.

மேலே நான் கூறியிருப்பவை கடவுள் உண்மையை நிரூபிக்கப் போதுமானவையாகும்.

''ஒருவன் என்னும் ஒருவன் காண்க'' என மணிவாசகர் கூறுவதால் கடவுள் ஒருவர்தான் இருக்க முடியும். தெய்வங்கள் பல உண்டெனச் சித்தாந்தம் சொல்கிறதே? என வினவலாம். படைத்தல், காத்தல் முதலியவை ஒழுங்கு பெற நடைபெறுவதற்கு அத்தெய்வங்களை நடத்துவிக்க அவற்றுக்கு மேலான ஒரு கடவுள் இருந்தாக வேண்டும். அந்த மேலான கடவுளைத்தான் சைவ சித்தாந்தம் ''சிவபரம் பொருள்'' எனக் கூறுகிறது.

சிவபெருமான் பிறப்பு, இறப்பு அற்றவன். எங்கும் நிறைந்தவன்; அப்பாலும் உள்ளவன்; முற்றறிவினன். எல்லாம் வல்லவன். அவன் கீழ் அடங்கி நடக்கும் தெய்வங்கள் பல உண்டு. அவன் எல்லாவற்றிலும் நீக்கமற நிறைந்திருப்பதால், அவனை வணங்கினால் எல்லாத் தெய்வங்களையும் வணங்கியதாகவே கொள்ளப்படும். எனவே, அவனைத்தான் வழிபட வேண்டுமெனச் சைவ சித்தாந்தம் சொல்லுகிறது. எல்லா ஆத்திக சமயங்களும் ஒரு முழுமுதற் பொருள் உண்டென்பதை ஒப்புக்கொள்கின்றன.

அவரவர் மொழியில் அதற்கு வெவ்வேறு பெயர்கள் கூறுவார்கள். சைவத்தில் அதற்குச் சிவன் எனப் பெயர் கூறுகிறோம்.

''தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி,''

என்பது மணிவாசகம்.

## நான் யார்?

ஒரு கூட்டத்தில் பேசிய போது நான், ''தம்பித்துரை யார்?'' என்று கேட்டேன். அவர் எழுந்து நெஞ்சில் கையை வைத்து ''நான்தான்'' என்று சொன்னார். ''நெஞ்சுதான் தம்பித்துரையா?'' என்று கேட்டேன். அவர், ''இல்லை'' என்று கூறி முகத்தைக் காட்டினார். அப்படியானால், ''முகம் தான் தம்பித்துரையா?'' என்று கேட்டேன். ''இல்லை - இல்லை'' என்றார். பின்னர், ''யார் தம்பித்துரை?'' என்று வினவிய போது, அவர் தலையிலிருந்து கால் வரை காட்டி ''எல்லாம் சேர்ந்ததுதான் தம்பித்துரை'' என்றார். அதற்கு நான் ''எல்லாம் சேர்ந்த நிலையில் தம்பித்துரையின் உடல் என்றுதான் சொல்லப்படும். தம்பித்துரையின் உடல் தம்பித்துரை ஆகாது'' என்று சொன்னேன். இதனைத்தான், ''மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா'' எனச் சிவஞான போத மூன்றாம் சூத்திரம் சொல்லுகிறது.

தூல உடம்பு, சூக்கும உடம்பு, பர உடம்பு என மூவகை உடம்பு நமக்கு உண்டு, ஆனால் இவை நாமாக மாட்டோம். ஒரு சொற்பொழிவைக் கேட்கின்றோம். அப்பொழுது வரும் தூக்கத்தை அடக்குகிறோம் என்றால் நம் உடலை நாம் அடக்குகிறோம் என்று பொருள். இதனால் உடல் வேறு; நாம் வேறு என்று தெரிகிறது.

ஒன்று அடக்கப்படும்போது, அதனை அடக்குபவனும், அடக்கப்படும் பொருளும் வெவ்வேறாகவே இருக்க வேண்டும். ஆகவே உடல் வேறு; நாம் வேறு என்பது தெளிவு. இதனையே ''எனது உடல் என்றலின்'' என மெய்கண்டார் கூறுகிறார். ''எனது உடல்'' என்பதில் தூல உடம்பு - சூக்கும உடம்பு பரவுடம்பு ஆகிய அனைத்தும் அடங்கிவிடும். எனினும் சூக்கும உடம்பிலுள்ள, மனம் புத்தி முதலியவை, நாமாக இருக்குமோ? என ஓர் ஐயம் எழக் கூடும். ஒரு சுவையான திரைப்படம் நடக்கும்போது அதற்குப் போகலாம் என நம் மனம் விரும்புகிறது. ஆனால் சித்தாந்த வகுப்புக்குப் போக வேண்டும் என்னும் எண்ணத்தால் திரைப் படத்திற்குப் போக விரும்பும் மனத்தை அடக்கி விடுகிறோம். அடக்கப்படும் பொருளாகிய மனம் வேறு; அதனை அடக்குகின்ற நாம் வேறு என்பதைச் சொல்ல வேண்டுவதில்லை.

மருத்துவர் ஒருவர் ஒரு நோயாளியைப் பார்த்து, ''எக்காரணம் கொண்டும் மது அருந்தக் கூடாது'' எனச் சொல்லியிருந்தார். அவர் ஒரு விருந்திற்குச் சென்றபோது, குடிவகைகள் பல இருப்பதைக் கண்டார். குடிக்க வேண்டும் என்னும் விருப்பம் அவர் மனத்தில் எழுந்தது. ''குடிக்கக்கூடாது''. என மருத்துவர் சொல்லி இருப்பதைப் புத்தி எடுத்து காட்டி-



யது. புத்தியை அடக்கி விட்டு மனம் சொன்னபடி குடிக்கத் தொடங்கினார். புத்தி அடக்கப்படுவதால் அது நாம் அன்று என்பது தெளிவாகிறது.

நாம் ஒரு கெட்ட செயலைச் செய்திருந்தால் சித்தம் அதனை அடிக்கடி நினைவூட்டும். அதனை மறப்பதற்காகப் பல்வகையான சிந்தனைகளைச் சித்தத்துள் புகுத்துகிறோம். இச் சிந்தனைகளால் சித்தம் அடங்கி விடுகிறது. குற்றச் செயல்கள் அப்புறம் நம்மை உறுத்துவதில்லை. இவ்வாறு சித்தமும் அடக்கப்படுவதால் ''அது வேறு; நாம் வேறு'' என்பது தெரியவருகிறது.

ஒரு திருடன் ஒரு வீட்டில் நுழைந்து திருட முயல்கின்றான். வீட்டுக்காரனைப் பயமுறுத்துகிறான். ''என்னை யார் என்று நினைத்தாய்?'' என அகங்காரமாகக் கூறுகிறான். அந்தச் சமயம் ஒரு காவல்துறை அதிகாரி உள்ளே வந்து விடுகிறார். அவரைக் கண்டதும் அந்தத் திருடன், அவர் காலில் விழுந்து, தன்னை மன்னித்து விடுதலை செய்ய வேண்டுமென்று கேட்கிறான். திருட வேண்டும் என்னும் முனைப்போடு வந்த அவன் முனைப்பாகிய அந்த அகங்காரத்தை அடக்கிவிட்டுக் காவல் துறை அதிகாரியின் காலிலே விழுகின்றான்.

முனைப்போடு ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்று நினைப்பதுதான் அகங்கார தத்துவமாகும். அது காவல் துறை அதிகாரியிடம் அடங்கி விடுவதால் ''அது வேறு; நாம் வேறு'' என்பது புலனாகிறது. இவ்வாறு சூக்கும உடம்பில் உள்ள மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான்கும் நாம் அல்ல என அறிந்து கொள்ளலாம். இதே போலப் பரவுடம்பிலுள்ள கருவிகளும் நாம் அல்ல என்பதை ஆராய்ந்து தெரிந்து கொள்ளலாம்.

மூன்று உடம்புகளும் அவற்றிலுள்ள கருவிகளும் நாம் அல்ல என்றால் நாம் யார்? என்னும் கேள்வி விடையிறுக்கப்படாமலே போய் விடும் அன்றோ? ஆகவே மெய் கண்டார் யாது ஒன்று இவையெல்லாம் ''நாம் அல்ல; நாம் அல்ல'' என்று தீர்மானிக்கிறதோ அதுதான் ''நாம்'' எனக் குறிப்பிடுகின்றார். அறிவு எங்கு இருக்கிறதோ அங்குதான் நாம் இருக்கிறோம். அறிவு இருந்தால் இச்சையும் செயலும் கூடவே இருக்கும். இச்சையும் செயலும், அறிவும் உடைய பொருள் எதுவோ அதுதான் நாம். அறிவுக்குத் துணையாக மனம் முதலிய கருவிகள் இருக்கின்றன. இவ்வாறு அறிவு விளங்குகின்ற ஒரு பொருளைத்தான் சைவ சாத்திரம் ''ஆன்மா'' என்று கூறுகின்றது. ஆன்மா வியாபகப் பொருள்; ஆணவம் மறைத்து நிற்பதால் அதன் வியாபகம் உலக அளவில் தெரியவில்லை. ஆணவம் ஓரளவு குறைந்துள்ள உடலில் அது தென்படுகிறது. உடலளவிலும்கூட நம் அறிவு எங்கு முனைத்து நிற்கின்றதோ அங்கேதான் ஆன்மா விளங்குகிறது.

ஓர் அழகான பொருளைப் பார்க்கிறோம்; கண்கள் வழியாக உயிர் உணர்வு முனைத்து நின்று அதனைப் பார்க்கிறது. அப்படிப் பார்க்கும் பொழுது ஆன்மா அங்கே விளங்கி நிற்கிறதென்று பொருள். ''நான் யார்?'' என்று கேட்டால், ''நான் ஆன்மா'' என விடையிறுக்க வேண்டும். எதற்கு இச்சை இருக்கிறதோ, அறிவு இருக்கிறதோ செயல் இருக்கிறதோ, அதுதான் ஆன்மா. தமிழில் ஆன்மா, ''உயிர்'' எனச் சொல்லப்படும். ஆன்மாவும் உயிரும் ஒன்றுதான். சிலர் பிராணவாயுவை உயிரென நினைத்துக்கொள்கிறார்கள். பிராணவாயுவிற்கு அறிவில்லாததால் அஃது உயிராகாது.

பிராணத் துடிப்பு என ஒன்றுண்டு. விபத்தில் உயிர் பிரிந்த உடல் சிறிது நேரம் துடிப்பதைப் பார்க்கின்றோம். ஆனால் அதற்கு அறிவு இச்சை, செயல் இல்லை. ஆகவே அஃது ''உயிரி'' ஆகுமே அன்றி உயி-ராகாது. ''உயிரி'' என்றால் பிராணத் துடிப்பு என்று பொருள்.

நெருப்பை எடுத்துவிட்டால், அஃது இருந்த இடத்தில் சிறிது நேரம் சூடு இருக்கும். அது போலத்தான் உயிர் பிரிந்த பின்னும் துடிப்பு இருக் கும். எனவே உயிரியை உயிர் எனக் கொள்ளக் கூடாது.

அறிவு எங்கு உண்டோ அங்கே ஆன்மா உண்டு எனக் கூறினோம். ''அந்த ஆன்மாதான் நாம்'' என்பதைத் தெளிவாக்கினோம். கல், மண், நெருப்பு முதலியவைகளுக்கு அறிவு இல்லை. ஆகவே அவற்றுக்கு ஆன்மா இல்லை. அவை சடம் எனச் சொல்லப்படும். புல்லுக்கு அறிவு உண்டு, தொட்டால் சிணுங்கும் செடியை நாம் பார்த்திருக்கின்றோம். பூனைக்கு அறிவு உண்டு; எலிக்கு அறிவு உண்டு; மனிதனுக்கு அறிவு உண்டு; அறிவு உள்ள அனைத்தும் ஆன்மாவே ஆகும். இறைவனுக்கும் அறிவு, இச்சை, செயல் மூன்றும் உண்டு. இறைவனின் இச்சா, ஞானக் கிரியைகளை ஆணவ மலம் மறைக்காது. உயிரின் இச்சா, ஞானக்கிரியைகளை ஆணவ மலம் மறைக்கும். இறைவன் சுதந்தரன், ஆன்மா அவன் துணையை நாடி நிற்கும் அடிமையாகும். ஆகவே ''ஆண்டான் வேறு; அடிமை வேறு;'' என்பது தெளிவு. ''என் அறிவு; என் ஆன்மா'' என்றும் சில சமயங் களில் சொல்கிறோம். அப்படியானால் அவை வேறு; நாம் வேறு ஆக மாட்டோமா? என வினவலாம். இங்கே ''என் அறிவு'' என்பது ''என் புத்தியையும்'', ''என் ஆன்மா'' என்பது ''என் பிராணவாயுவையும்'' குறித்துச் சொல்லும் பான்மை வழக்கென அறிதல் வேண்டும்.

மலேசிய சைவசித்தாந்திகளில் ஒரு சிலர், ''ஆன்மாவிற்கு அறிவு ''இல்லை , அறியும் தன்மைதான் இருக்கிறதென்று'' சொல்கிறார்கள். தன்மை என்பது செயலாகவும் இருக்கும்; பண்பாகவும் இருக்கும். பண்-பின் அடிப்படையில்தான் செயல் உண்டாகும். ஆன்மாவுக்கு அறி-வாகிய பண்பு இல்லாவிட்டால் அறியும் தன்மையாகிய செயல் உண்-டாகாது.



''நுரைப்பஞ்சு (sponge)'' நீரை ஈர்க்கும். ஆனால் அதனிடத்தே நீர் இல்லை; அது போல ஆன்மாவிடத்தே அறிவு இல்லை; அறியும் தன்மை-தான் உண்டென்று விவாதிக்கிறார்கள். பஞ்சு நீரை ஈர்த்த பின்னர் அதனிடத்திலே உள்ள நீர் நீராகவே இருக்கும். ஒரு பஞ்சில் உள்ள நீருக் கும் வேறு பஞ்சிலுள்ள நீருக்கும் வேறுபாடு இல்லை; ஆனால் ஆன்மா நல்லதையும் அறிகிறது; கெட்டதையும் அறிகிறது. ஓர் ஆன்மா தீமையை விரும்புகிறது; மற்றொன்று நன்மையை விரும்புகின்றது. ஆணவமல மறைப்பு வேறுபாடு இதற்குக் காரணம் என்பது அவ்வளவு பொருத்த-மாகாது. ஓர் ஆன்மாவின் அறிவை மலம் கூடுதலாக மறைக்கிறது; மற்றோர் ஆன்மாவின் அறிவை மலம் குறைவாக மறைக்கிறது. இதனா-லேயே ஆன்மாக்கள் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் எனப் பிரிக்கப்பட்டுள்ளனர். இவ்வேறுபாடு மல மறைப்பின் அளவு காரண மாக உண்டாகிறது. ஆணவமல மறைப்பு வேறுபாடு ஆன்மாக்களின் சிறப்பியல்பு வேறுபாட்டால் உண்டாகின்றது. சிறப்பியல்பு வேறுபாடு ஆன்மாக்களின் அறியும் திற வேறுபாட்டால் உண்டாகிறது. அறிவின் திறத்தில் வேறுபாடு இருப்பதால், அறியும் தன்மை மட்டுமல்லாமல், ஆன்மாவுக்கு அறிவும் இருக்கிறது என்பது தெரியவரும். ''அறிவு இல்லை என்றால், ஆன்மாவுக்கு இறைவன் அறிவிக்க மாட்டான்'' என்பது சிவப் பிரகாசக் கருத்தாகும்.

ஆன்மா தன் அறிவு, இச்சை, செயல்களைத் தானே சுதந்திரமாகச் செயல் படுத்த முடியாது. இறைவனின் துணை அவசியம் வேண்டும். இறைவன் நமக்கு நம் தன்மைக்கு ஏற்ப வெவ்வேறு விதமாக அறிவிக் கின்றான்.

இறைவன் நம் அறிவிச்சை செயல்களில் நின்று அறிவிக்கும் போது, அவன் அவனாக நிற்காமல் நாமாக நின்று நம் இயல்புக்கு என்ன தேவையோ அதனை அறிவிக்கின்றான். இதனால் பெத்த நிலையில் செயல் கள் நம்முடையனவாகவே கொள்ளப்படுகின்றன. அவற்றுக்கேற்ற வினைப்பயன்களையும் நாம் அனுபவிக்கின்றோம். ஞானம் பெற்ற பின்னர்தான் நாம் அவனாக நிற்க முயல்கின்றோம். அப்போது எல்லாம் அவன் செயலாகின்றன. இவ்வேறுபாட்டை நாம் நன்கு அறிந்து கொள்ள வேண்டும்.

தாயுமானார், ''என் அறிவு'' என்றும், ''என் இச்சை பராபரமே'' என்-றும் சொல்வது பெத்த நிலையில், அவன் நாமாக நிற்பது பற்றியே ஆகும். சிவஞான சுவாமிகள்'' ''இவன் அவனாய் நின்று முக்தி நிலையில் அவன் ஒழிந்த விடயங்களை விடயித்தலின் விடயங்கள் இவனுக்கன்றி அவனுக்

காயின'' என்று கூறுகிருர். ஆகவே எல்லாம் அவன் செயல் என்பது ''நான் என்னும்'' முனைப்பு நீங்கிய முத்தி நிலை பற்றியே என அறிதல் வேண்டும்.

''நான் யார்?'' என்பதற்கு இதுகாறும் விடை கண்டோம். நானுகிய ஆன்மா எப்படி உண்டாகியது? என்னும் கேள்வி பிறக்கவே செய்யும். மற்ற சமயங்கள் இறைவன் நம்மை உண்டாக்கினுன் என்று கூறுகின்றன. ஆனுல் சைவ சமயம் ஆன்மாவை இறைவன் உண்டாக்கவில்லை என்று கூறுகின்றது.

கடவுள் ஒருவர் உண்டென்றும், அவர் எல்லாம் வல்லவர் என்றும் முன்னர் நிறுவியிருக்கின்ருேம். எல்லாம் வல்ல அவன், ஆன்மாவை ஏன் உண்டாக்கக்கூடாது? என வினவலாம்.

ஆன்மாவை உண்டாக்க வேண்டிய தேவை இறைவனுக்கு இல்லை. எந்தத் தேவையுமற்ற அவன் ஏன் ஆன்மாவை உண்டாக்கிப் பிறப்பு, இறப்பிற்கு உட்படுத்த வேண்டும்? தன்னை வணங்குவதற்காக இறைவன் ஆன்மாக்களை உண்டாக்கினுன் எனக் கூறினுல் அவன் வேண்டுதல், வேண்டாமை இல்லாதவன் என்பது அடிபட்டுப்போகும். இறைவனுக்கு எந்தத் தேவையும் இல்லாததால் அவன் ஆன்மாக்களை உண்டாக்கவில்லை எனச் சைவ சமயம் கூறுகிறது.

உடலையும் உலகையும் இறைவன் உயிர்களுக்காகப் படைத்து அளிக்கிருன். ஆனுல் உயிர்களைப் படைக்க வேண்டிய அவசியம் அவனுக்கு இல்லை. அப்படியானுல் உயிர்கள் எப்படி உண்டாயின?

கடவுளை யாரும் படைக்கவில்லை; அது போல - ஆன்மாக்களை யாரும் படைக்கவில்லை. அவை கடவுளைப் போல அழியாத பொருளாகவும், தோற்றமில்லாத பொருளாகவும் என்றும் இருக்கின்றன. அவைகளுக்கு உடல்களைத்தாம் இறைவன் படைத்திருக்கின்ருன். இதனுல் ஆன்மா அநாதி நித்தியப் பொருள் என்பது புலனுகிறது.

ஆன்மா என்றும் அழியாத நித்தியப் பொருளாக இருந்தால்தான், இறைவன் உலகத்தைப் படைத்தது நியாயம் என்பது புலனுகும். இல்லையேல் அது வீண் செயலாகிவிடும். ஆன்மாக்களின் உடல் அழிந்தாலும் அவை மீண்டும் மீண்டும் பிறந்து படிப்படியே உயர்ந்த நிலைக்கு வந்து முத்தியை அடையும். முக்தியில் அது பேரின்பத்தை நுகர்ந்துகொண்டு என்றும் இருக்கும். இவ்வாறு சொன்னுல்தான் உலகப் படைப்புக்குப் பொருள் உண்டு.



புறச்சமயங்களில் சில, திருந்தாத ஆன்மாக்கள் மீளா நரகத்தில் கிடக்குமெனச் சொல்கின்றன. இஃது இறைவனின் எல்லையில் கருணைக் குப் பொருத்தமாகாது. ஆன்மா யாராலும் படைக்கப்படாத பொருள். அதன்கண் உள்ள அறிவிச்சை செயல்கள் மிகவும் பலஹீனமானவை. படிப்படியே பயிற்சி பெற்றுத்தான் அவை பலமடைய வேண்டும். இது-தான் ஆன்மாவின் இயல்பு. இந்த இயல்பை மாற்றுமல் ஒவ்வோர் ஆன்-மாவும் அதனதன் நிலையில் படிப்படியே முன்னேறி முத்திப் பேரின்-பத்தை நுகரும் எனச் சொல்வதுதான் இறைவனின் கருணைக்குப் பொருத்தமாகும். ஒவ்வோர் ஆன்மாவும் இறுதியில் முத்திப் பேற்றை அடையும் என்பதுதான் சைவக் கொள்கையாகும்.

ஆன்மாக்களுக்கு எண்ணிக்கை இல்லை; எண்ணிலியில் இருந்து எதனைக் கழித்தாலும் அஃது எண்ணிலியாகவே இருக்கும். எத்தனை ஆன்-மாக்கள் முத்தியடைந்தாலும், முக்தி அடைய வேண்டிய ஆன்மாக்கள் என்றும் இருந்து கொண்டே இருக்கும். ஆனுல் ஒவ்வோர் ஆன்மாவும் இறுதியில் முத்தி அடைந்தே தீரும். இதனுல் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழிலுக்கும் எக்காலத்திலும் முடி-வில்லை. தூலம் அழியும் போது இறைவன் சூக்குமத்தில் இவற்றை நடத்து-வான். மீண்டும் தூலம் தோன்றும். பலப்பல பிறவிகள் எடுத்துத்தான் ஆன்மா இறுதியில் முத்திப் பேற்றினைப் பெறும். ''உடலின் இயக்கத்தால் அறிவு தோன்றுகின்றது'' என்றும் ''ஆன்மா என ஒன்றில்லை'' என்றும் புறச் சமயங்களில் சில சொல்லுகின்றன. உடலின் இயக்கத்தால் பசி, தாகம், சோர்வு முதலியன யாவருக்கும் ஒரே விதமாகவே தோன்றும்.

ஆனுல் ஒவ்வோர் உடலிலும் உள்ள ஆன்மா வெவ்வேறு விதமான விருப்பு வெறுப்புக்களை உடையதாக இருப்பதால் அதனை உடலின் இயக்கமெனச் சொல்லவராது. அறிவிச்சை செயல்களைத் தன் இயல்புக்கு ஏற்றவாறு ஆன்மா இறைவன் துணையால் பயன்படுத்துகிறது. உடலில் பெரும் வலி இருக்கும்போது கூட ஆன்மா அதனைப் பொருட்படுத்தாமல் தன் எண்ணத்தை நிறைவேற்ற முயல்கிறது. எனவே ஆன்மா வேறு, உடலின் இயக்கம் வேறு என்பது தெளிவாகிறது.

கடவுள் ஒருவர் இல்லையென்ருல் ஆன்மாவும் இல்லையென்று சொல்லிவிடலாம். கடவுள் உண்டென்று முன்னரே மெய்ப்பித்திருக் கின்ருேம். அப்படியானுல் அவரால் பயனடையக் கூடிய ஆன்மாவும் இருக்கத்தான் வேண்டுமென முடிவு செய்வதே பொருத்தமாகும். வெறு-மனே உடல் இயக்கத்தால் அறிவு தோன்றிச் சில காலம் இருந்து அழிந்து போகிறதென்ருல், பேரறிவுப் பொருளாகிய கடவுளின் இருப்புக்கு அது பொருந்தாததாக முடியும்.

இதுகாறும் கடவுள் ஒருவர் உண்டென்பதையும் ஆன்மாக்கள் எண்ணில என்பதையும் நிறுவினோம். ஒவ்வோர் ஆன்மாவும் வெவ்வேறு விதமான இன்ப துன்பங்களை அனுபவிப்பதால் ஆன்மாக்கள் பல என அறிதல் வேண்டும்.

திருமந்திரத்தில்,'' பதி, பசு, பாசம், அனாதி'' எனத் திருமூலர் கூறுகிறார். படைக்கப்படாமல் என்றும் இருக்கும் பொருள் அனாதியாகும். ''கடவுள் அனாதி; ஆன்மா அனாதி; பாசம் அனாதி'' எனத் திருமந்திரம் கூறும் இவற்றுள் பதியாகிய இறைவனும் பசுவாகிய ஆன்மாவும் அனாதி என்பதை இதுகாறும் ஆராய்ந்தோம். இனிப் பாசம் எவ்வாறு அனாதி என்பதை ஆராய்வோம்.



## பாசம் என்றால் என்ன?

ஆன்மா பலகீனமான ஒன்று. உடல் பலகீனமாக இருந்தால் அதனைக் கிருமிகள் தாக்குவதைக் காண்கிறோம். அதுபோல ஆன்மா தன் இயல்பில் பலகீனமாக இருப்பதால் ஆணவ மலம் என்ற ஒன்று அதனைத் தாக்குகிறது. இறைவனின் அறிவு இச்சை செயல்கள் பலமாக இருப்பதால் அவனை அது தாக்குவதில்லை.

ஆணவ மலம் என்றால் என்ன? அஃது அறிவை மறைக்கின்ற ஓர் இருட் பொருளாகும். அஃது அறிவற்றது. இவ்வாறு ஒரு பொருள் உண்டென்பதைச் சைவ சிந்தாந்தம் மட்டுமே சொல்கிறது.

ஆணவ மலம் நம்மை மறைக்கிறது என்பதுதான் நமக்குத் தெரியாதே ஒழிய நம் செயற்பாடுகளும் பேச்சுகளும் அஃது உண்டென்பதைப் புலப் படுத்தவே செய்கின்றன. ஒருவர் தம் பெருமையைத் தாமே பேசுகிறார்; மற்றொருவர் தம் செல்வப் பெருக்கையும் அதிகாரத்தையும் அடிக்கடி வெளிப் படுத்துகின்றார். ஒரு செயல் தீமையானது என்று நமக்கு நன்கு தெரிகிறது. இருந்தும் அதன் வயப்படுகிறோம்; இவையெல்லாம் ஆணவமலத் தாக்குதலால் நிகழ்வன என அறிதல் வேண்டும்.

இந்தியாவில் கப்பல் படைத் தலைவர் ஒருவர் இருந்தார். அவர் சட்டத்துறையில் நிபுணர். அவர் ஒருமுறை வெளிநாட்டிற்குச் சென்று விட்டு முன்னறிவிப்பு இல்லாமல் தன் வீட்டிற்குத் திரும்பினார். அவர் மனைவி வேறோர் ஆடவரோடு இருப்பதைப் பார்த்தார். பார்த்ததும் துப்பாக்கியை எடுத்து அவரைச் சுட்டுவிட்டார்.

காவல் நிலையத்திற்குச் சென்று அதிகாரியிடம் நிகழ்ச்சியை எடுத்துக் கூறினார். அதிகாரி அவரின் நெருங்கிய நண்பர். அவர் இவரிடம், ''ஏன் இப்படி ஒரு தப்பைச் செய்தீர்கள்? பிடிக்காவிட்டால் அவளை விவாகரத்துச் செய்து இருக்கலாமே? நீங்கள் சட்டம் படித்திருந்தும் இப்படி ஒரு கொலையைச் செய்யலாமா?'' என்று வினவினார். அதற்குக் கப்பல் படைத்தலைவர் ''எனக்கு எல்லாம் தெரியும்; ஆனால் அந்தக் காட்சியைப் பார்த்தவுடன் என் அறிவை ஏதோ ஒன்று மறைத்து விட்டது'' என்றார். அந்த ஏதோ ஒன்றுதான் ஆணவமலம் என அறிதல் வேண்டும்.

ஆணவமலம் தீமையின்பால்தான் நம்மை ஈர்க்கும். தீமை செய்துவிட்டு அதற்குப் பலவகைப் போலிச் சமாதானங்களை ஆணவமலம் நம்மைச் சொல்லச் சொல்லும். ஆணவமலம் இருப்பதால்தான் உலகத்தில் இத்தனை அக்கிரமங்களும், கொடுமைகளும் நிகழ்கின்றன. நியாயம் அன்றெனத் தெரிந்தும் அக்கிரமம் செய்வதற்குக் காரணம் ஆணவமலமேயாகும். அஃது அறிவை மறைத்துவிடுவதால் நம் உணர்வுக்கு நியாயம் புலப்படாமல் போகிறது.

ஆணவமலம் வியாபகப் பொருள். அஃது இல்லாத இடமே இல்லை. பலகீனமாக ஆன்மா இருப்பதால் அதன் அறிவு, இச்சை செயல்களை அது மறைக்கிறது.

சிவப்பிரகாசத்தில், ''எல்லா ஆன்மாக்களும் ஆணவமல வயப்பட்டுள்ளன'' என்பதை, ''நித்தமாய் எண்ணரிதாய் இருள் மலத்தில் அழுந்தி உற்றிடும் பசு வர்க்கம்'' எனக் கூறப்பட்டுள்ளது. ஆணவமலம் வியாபகப் பொருளாதலால் ஆன்ம அறிவை இயல்பாகவே அது மறைக்கிறது. ஆணவமலம் ஆன்மாவை மறைக்கும் பொழுது ஆன்மா அதனைப் பற்றி அதனுள் அழுந்துகிறது. ''அனாதியே மலத்தைப் பற்றுதல் உயிரின் வினையாய்'' எனச் சிவஞான சுவாமிகள் கூறுவதால் ''இப்பற்றுதலே'' மூலகன்மம் எனப்படும்.

ஆணவமலத்தை யார் உண்டாக்கினார்? ஒருவரும் உண்டாக்கவில்லை. இறைவனைப்போல அஃதும் அனாதி நித்தியமான பொருளாக இருக்கிறது. ''இறைவன் அதனை உண்டாக்கினான்'' என ஏன் சொல்ல கூடாது? என வினவலாம். இறைவன் அதனை உண்டாக்கி இருந்தால் எதிலிருந்து அஃது உண்டாக்கப்பட்டது? என்னும் வினா எழும். ''தன்னில் இருந்து இறைவன் அதனை உண்டாக்கினான்'' என்றால் பேரறிவுப் பொருளாகிய அவனிடம் இருந்து அறிவு அற்ற பொருள்களாகிய அஃது உண்டாகியது எனச் சொல்ல வேண்டியது வரும். அறிவிலிருந்து அறிவற்ற ஒன்று தோன்றாது. இறைவன், ''உண்டாகுக'' என்று கூறினான். மோகம் விளைவிக்கும் வியாபகப் பொருளாதலால் ஆன்ம அறிவை இயல்பாகவே அது மறைக்கிறது. ஆணவ மலம் ஆன்மாவை மறைக்கும் பொழுது ஆன்மா அதனைப் பற்றி அதனுள் அழுந்துகிறது. ''அனாதியே மலத்தைப் பற்றுதல் உயிரின் வினையாய்'' எனச் சிவஞான சுவாமிகள் கூறுவதால் ''இப்பற்றுதலே'' மூலகன்மம் எனப்படும்.

இறைவன் ஏன் ஆணவமலத்தை அழிக்கவில்லை? நித்தியப் பொருளை அழிக்க வராது. தம் வல்லமையால் இறைவன் அதனை அழிக்கின்றார் என்று வைத்துக் கொள்வோம். அதனை அழித்து விட்டால் பலகீனமான உயிர்க்கு ஆணவமலத்தைப்பற்றி இன்ப துன்பங்களை அநுபவித்துப் பயிற்சி வன்மையால் இறைவனை அடைந்து பேரின்பத்தை நுகரக்கூடிய வாய்ப்பில்லாமல் போகும். பயிற்சி பெறுவதற்காக உயிர்களுக்கு ஆணவமலம் தேவைப்படுகிறது. இதனை ''ஆணவமல உபகாரம்'' எனச் சாத்திரம் சொல்லும்.



இப்பயிற்சிக்காகவே உயிர்கள் ஆணவமல வயப்படுவதைத் தடுக்காமல் இறைவன் விட்டு வைத்திருக்கிறான். உயிரை இறைவன் படைக்கவில்லை யாதலால் அவை படிப்படியாகவே உணரும் தன்மை உடையதாயிருப்பதற்கு அவன் பொறுப்பாளியாகமாட்டான். தன்மையை மாற்றினால் ஆன்மா அழிந்துவிடும்.

நம் அறிவை நாம் ஆராய்ந்து பார்த்தால் அதனை ஆணவமலம் மறைத்திருப்பது புலனாகும். இந்த ஆணவ மலத்தைத்தான் ''பாசம்'' என்று சாத்திரம் சொல்கிறது. மாயை கன்மங்களைப் பாசம் என்று கூறினாலும் உண்மையான பாசம் ஆணவமலமே ஆகும்.

சைவ சித்தாந்தம் மூன்று மலங்களைப் ''பாசம்'' எனக் கூறும். (1) ஆணவமலம், (2). மாயாமலம், (3). கன்மமலம். இம்மூன்றில் உண்மையாக நமக்குப்பாசமாக இருப்பது ஆணவமலம் எனக் குறிப்பிட்டோம். இப்பாசத்தை நீக்குவதற்காகத்தான் இறைவன் மாயாமலம், கன்மமலமாகிய பாசங்களை ஊட்டுகிறான். பாச நீக்கத்திற்காக இம்மலங்கள் ஊட்டப்படுவதால் உண்மையான பாசம் ஆணவமலமேயாகும்.

இந்த உலகத்துப் பொருள்கள் எதிலிருந்து உண்டாகி இருக்கும் ? இறைவன் அறிவுடைப் பொருள். அவனிடம் இருந்து அறிவற்ற பொருளாகிய கல், மண், சூரியன், சந்திரன் முதலிய பொருட்கள் உண்டாகியிருக்க முடியாது. கிறிஸ்துவ மதத்தில் இறைவன் ''உண்டாகுக'' என்றான்; உலகம் உண்டாயிற்று'' எனச் சொல்லப்பட்டுள்ளது. இப்படிச் சொன்னாலும் உலகம் அவனிடம் இருந்து உண்டாகியது என்றுதான் பொருள். அறிவற்ற உலகம் அறிவுள்ள இறைவனிடம் இருந்து உண்டாகியிருக்க முடியாது.

உலகத்துப் பொருட்கள் அனைத்தும் அழிகின்றன. அழிகின்ற பொருட்கள் மூலமாக இருக்க முடியாது. இப்பொருட்களுக்கு மூலமாக வேறொரு பொருள் இருந்தாக வேண்டும். இப்பொருட்களைப் பகுத்துக் கொண்டே சென்றால் அவை முடிவில் ஓர் ஆற்றலாக மாறுகின்றன என விஞ்ஞானம் கூறுகின்றது. இந்த ஆற்றலிலிருந்துதான் உலகப் பொருட்கள் அனைத்தும் உண்டாகி இருக்கின்றன என்பது விஞ்ஞானம் கண்ட உண்மையாகும். இந்த ஆற்றலுக்கு Universal Cosmic Energy என விஞ்ஞானம் பெயரிட்டுள்ளது. சைவ சித்தாந்தம் இந்த ஆற்றலை ''மாயை'' எனக் கூறுகிறது. உலகத்துப் பொருட்கள் அனைத்தும் அறிவற்றவை. உயிர் பிரிந்ததும் உடலும் அறிவற்றதாக இருப்பதைக் காண்கிறோம். ஆகவே உலகத்துப் பொருட்களும் உயிர்கள் நின்றுலவும் உடல்களும் மாயையில் இருந்தே உண்டாக்கப்பட்டன எனச் சைவ சித்-

தாந்தம் கூறுகிறது. மாயை அறிவற்ற பொருளாக இருப்பதால்தான் அறிவற்ற உலகமும் உடலும் அதில் இருந்து உண்டாகி இருக்கின்றன.

மாயை அறிவற்ற பொருளாதலால் அது தானே நானுவித உலகமாகவும், உடலாகவும் மாற முடியாது. இறைவன்தான் அதிலிருந்து உலகையும் உடலையும் உண்டாக்கி இருக்க வேண்டும்.

மாயை அறிவற்றது. இறைவனிடமிருந்து அறிவற்ற பொருள் உண்டாகியிருக்க முடியாது என மேலே குறிப்பிட்டுள்ளோம். அப்படியானுல் அஃதும் இறைவனைப் போல யாராலும் உண்டாக்கப்படாத அநாதி நித்தியப் பொருளாகவே இருக்க வேண்டும். மாயையிலிருந்து இறைவன் ஏன் உலகையும் உடலையும் உண்டாக்க வேண்டும்? ஆணவமலம் இரு பொருள், மாயை சிறிது ஒளியுடைய பொருள். இருட் பொருளாகிய ஆணவ மலத்திலிருந்து ஆன்மாவை விடுவிப்பதற்காக இறைவன் மாயையில் இருந்து உலகையும் உடலையும் உண்டாக்கியிருக்கிருன்.

மாயை சிறிது ஒளி உடைய பொருளாதலால் இருள் பொருளாகிய ஆணவமலவயப்பட்ட ஆன்மா உடலைப் பெற்றதும் சிறிது அறிவு விளக்கம் பெறுகிறது. இதற்காகவேதான் இறைவன் மாயையில் இருந்து உலகையும் உடலையும் படைத்தளித்திருக்கிருன்.

உயிர்கள் உடலில் நின்று உலக வாழ்க்கையை நடத்துகின்றன. இதனுல் அவை படிப்படியே அறிவு விளக்கம் பெறுகின்றன. இருப்பினும் ஆணவமலச்சார்பால் உயிருக்கு உடல் மீதும் உலகம் மீதும் ஒரு பற்று உண்டாகிறது. எனவேதான் மாயையும் ஒரு பாசமாகிறது.

மாயையை முப்பத்தாறு தத்துவமாகச் சைவம் வகுத்திருக்கிறது. உலகத்தில் காணப்படுகின்ற மண், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகிய ஐந்தும் பூத தத்துவங்களாகும். இவற்றின் நுண்நிலையாக உள்ள சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் ஐந்தும் தன்மாத்திரைத்தத்துவங்கள் எனப்படும். கண், காது, மூக்கு, நாக்கு, தோல் ஆகிய ஐந்தும் ஞானேந்திரிய தத்துவங்கள் எனப்படும். கால், கை, வாய், மலத்துவாரம், நீர்த்துவாரம் ஆகிய ஐந்தும் கன்மேந்திரிய தத்துவங்கள் எனப்படும். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான்கும் அந்தக் கரண தத்துவங்கள் எனப்படும். இங்கே கூறப்பட்ட இந்த இருபத்து நான்கு தத்துவங்களும் பிரகிருதிமாயையைச் சார்ந்தவை இம்மாயைக்கு மேலே உள்ள கலை, வித்தை, அராகம், காலம், நியதி, மாயை, புருடன் ஆகிய ஏழும் அசுத்த மாயா தத்துவங்களாகும். இவற்றுக்குமேலே உள்ள நாதம், விந்து,



சாதாக்கியம், மகேசுவரம், சுத்த வித்தை என்னும் ஐந்தும் சுத்தமாயா தத்துவங்கள் ஆகும். ஆக முப்பத்தாறு தத்துவங்கள் மாயையிலிருந்து உண்டாகின்றன. இந்தத் தத்துவங்கள் உடலாகவும் உல்கமாகவும் பயன்படுகின்றன.

விஞ்ஞானம் உடல் உறுப்புக்கள் எதனையும் உண்டாக்கக் கூடிய ஆற்றல் பெறவில்லை. மற்ற உடலிலிருந்து உறுப்புக்களை எடுத்துப் பொருத்த அதனுல் முடியுமே அன்றிப் புதியதாக ஒன்றை அஃது உருவாக்க முடியாது. ஆகவே உடலை இறைவன்தான் உண்டாக்கியிருக்கிருன் என்பது தெளிவு.

உலகத்தில் உள்ள மண், நீர், சூரியன், சந்திரன் முதலிய பொருட்களை மனிதன் உண்டாக்க முடியாது. எனவே உலகமும் இறைவனுல்தான் உண்டாக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது புலனுகும்.

உடம்பும், உலகமும் இருப்பதால் ஆன்மாவிற்கு சிறிது ஒளி கிடைக்கிறது. ஆணவமலத்திலிருந்து அது மெல்ல விடுபட்டு நல்வினை, தீவினைகளைப் புரிகின்றது.

இறைவன் எந்தத் தேவையும் அற்றவன். அனுதியாக உள்ள ஆன்மா அனுதியாக உள்ள ஆணவமலத்தால் மறைக்கப்பட்டு அறிவு, இச்சை செயல்களை இழந்து மூடமாகக் கிடப்பதை அவன் காண்கின்ருன். இந்த நிலையிலிருந்து ஆன்மாவை விடுவிப்பதற்காகத்தான் கருணை காரணமாக மாயையில் இருந்து உலகையும் உடலையும் படைத்திருக்கிருன். உயிர்கள் தம் இயல்பில் படிப்படியாகவே பயிற்சி பெறும் தன்மை உடையவையாகும். இறைவன் உலகையும், உடலையும் படைத்தளித்ததும் சிறிது அறிவு விளக்கம் பெற்ற உயிர் உடலைப் பற்றி நல்வினை தீவினைகளைச் செய்கின்றது. ஆணவமலச்சார்பு இருப்பதால்தான் முழுநல்வினையாகவோ முழுத் தீவினையாகவோ செய்ய முடியாமல் இரண்டும் கலந்த வினைகளை உயிர்கள் புரிகின்றன. சிறிது ஒளியை உடைய மாயை இதற்குத் துணை செய்கிறது. இறைவனின் திருவருட்சத்தியும் திரோதான சக்தியாக நின்று துணை செய்கிறது. இதனுலேயே உயிர்கள் நல்வினை தீவினை இரண்டையும் செய்கின்றன.

ஆன்மாக்கள் நல்வினை செய்யும் பொழுது இறைவன் அவற்றுக்கு இன்பத்தை ஊட்டுகிருன். அவை தீவினை செய்யும் போது துன்பத்தை ஊட்டுகிருன். இவ்வாறு இன்ப துன்பங்களை உயிர் மாறி மாறி அனுபவித்து அறிவு விளக்கம் பெறுகிறது. முடிவில் இறைவன்தான் உண்மையான இன்பப்பொருள் என்பதை உணர்ந்து அவனை இறுகப் பற்றி முக்தி இன்பத்தை பெறுகிறது.

நல்வினை தீவினைகளும் ஆணவமலச்சார்பால் பற்றுதலை உண்டாக்கு-கின்றன. ஆகவே இந்த நல்வினை தீவினைகளும் ''பாசம்'' என்றே சொல்லப்படுகின்றன. ''அனுதியே மலத்தைப் பற்றுதல்'' மூலகர்மம் அதாவது அனுதிகன்மம் எனக் கூறினேம். உலகிடை உயிர் செய்கின்ற நல்வினை தீவினைகள் ''காரியகன்மம்'' எனப்படும்.

காரியகன்மத்தைச் சைவ சித்தாந்தம் மூவகையாகப் பகுததுள்ளது. இந்தப் பிறப்பில் நாம் செய்யும் வினைகள் ஆகாமியம் எனப்படும். முன் பல பிறப்புக்களில் செய்துள்ள வினைகள் சஞ்சிதம் எனப்படும். முன் பல பிறப்புகளில் நாம் செய்துள்ள வினைகளின் ஒரு பகுதியை இப்பொழுது நாம் அனுபவிப்பதற்காக இறைவன் ஊட்டுகிருன். இது ஊழ்வினை எனப்படும். ஊழ்வினையைப் பிராரத்தம் எனச் சாத்திரம் சொல்கிறது.

ஊழ்வினையை நாம் அனுபவிக்க அனுபவிக்கத்தான் நம் அறிவு திருத்தம் பெறும். இதற்காகத்தான் இறைவன் அதனை நமக்கு ஊட்டுகின்ருன்.

ஊழ்வினையின் காரணமாக இன்ப துன்ப அனுபவம் உண்டாகிறது. இந்த அனுபவத்தால் நல்வினை தீவினை இரண்டையும் ஒப்ப நோக்கும் திறன் உண்டாகும். இந்நிலையில் மலபரிபாகமும் அருள் வீழ்ச்சியும் ஏற்படுவதால் இறைவன் குருநாதனுகத் தோன்றி ஞானத்தை உணர்த்து-வான். ஞானம் பெற்றபின் உயிர் இறைவன் திருவருளைப் பற்றி முக்தியை அடையும். மேலே கூறியவாற்ருல் ஆணவம், கன்மம், மாயை எனப் பாசம் மூவகைப்படும் என்பது புலனுகும்.



## வழிபாட்டு முறைகள்

இறைவன் வியாபகன் அவனைச் சிவன் எனச் சைவ சித்தாந்தம் கூறுவதாக முன்னர் குறிப்பிட்டோம். உண்மையில் அவனுக்கு எந்த உருவமும் இல்லை. இதனை மணிவாசகர், ''ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்று-மிலார்க்கு, ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ '' எனக் கூறியுள்ளார்.

இறைவனுக்கு எந்த உருவமும் இல்லாவிட்டாலும் ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும் பொருட்டு அருவம், அருவுருவம், உருவம் ஆகிய மூன்று திருமேனிகளை எடுக்கின்ருன். இம்மூன்று திருமேனிகளையும் கடந்த நிலை சொரூபம் என்று கூறப்படும்.

எங்கும் நிறைந்த நிலையை அருவம் என்கிறேம். சிவலிங்கத்திற்குக் கண், காது, மூக்கு முதலியவை இல்லை. எனினும் பிண்டமாக ஒரு வடிவம் இருக்கிறது. கண், காது முதலியன இல்லாமையால் அருவம் என்றும், பிண்டமாக இருப்பதால் உருவம் என்றும் சிவலிங்கத் திரு-மேனியைக் கூறுகின்றேம். இதனல் சிவலிங்கம்அருவுருவம் எனப்படும். விநாயகர், முருகன், நடராஜர், அம்மை அப்பன் முதலியவை உருவத் திருமேனிகளாகும். இவற்றுள் உருவத்திருமேனி வழிபாட்டைச் சைவ சித்தாந்தம் மிகவும் வலியுறுத்துகின்றது. உருவத்திருமேனியைத் தரிசிப்ப-தற்காக ''மீண்டும் பிறக்க வேண்டும்'' என அப்பர் சுவாமிகள் கூறுகிருர்.

உருவத்திருமேனி வழிபாட்டிலேயே மூவகைத் திருமேனி வழிபாடும் உண்டு; வடிவத்தை வழிபடுவது உருக வழிபாடு; அவன் நாமத்தை எவ்விடத்தும் சொல்வது அருவ வழிப்பாடாகும்; சோதி வட்டத்துள் இருப்பதாக உருவத் திருமேனியை நினைத்து வழிபடும்போது அஃது அருவுருவ வழிபாடாகிறது. உருவத் திருமேனியில் உள்ளத்தை நிறுத்தி தியானித்தால் மூவகைத் திருமேனி வழிபாட்டுப் பயனையும் பெறலாம்.

எந்த உருவத்தை எடுத்துக்கொள்வது? என்று வினவலாம். முழுமுதல் பொருளாகிய சிவன் பல்வேறு வடிவங்களை எடுத்துள்ளான். உதாரணமாக அம்மை அப்பர் வடிவம், நடராஜர் வடிவம், தட்சனு மூர்த்தி வடிவம் முதலியவற்றைக் கூறலாம். விநாயகர், முருகன், அம்பாள் வடிவங்களையும் சிவ வடிவங்களாகக் கொள்ளலாம். இவற்றுள் எந்த வடிவத்தை நம் மனம் விரும்புகின்றதோ அந்த வடிவத்தை உபாசனு மூர்த்தமாக எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த வடிவத்தையே நாம் விடாது வழிபட வேண்டும். உபாசனு மூர்த்தத்தைக் ''காமர் கடவுள்'' எனப் பரிபாடல் கூறுகிறது.நம் உபாசனு மூர்த்தியே மற்ற சிவ வடிவங்-களாகவும் இருக்கிருர் என உணர்ந்து மற்ற வடிவங்களை வணங்கும்

பொழுதும் உபாசன மூர்த்தியையே நினைந்து வணங்க வேண்டும்.

சிறு தெய்வங்களை வணங்கக்கூடாது; முனியாண்டி, காட்டேரி முதலியவை சிறு தெய்வங்களாகும். அவை கிராம மக்களின் அறியாமை-யால் வந்தவையாகும். நவக்கிரகங்கள் அதிதெய்வங்கள் எனக் கூறப் படும். அவற்றை வணங்குவதில் தவறில்லை. ஆனால் அவை எந்தப் பயனையும் தரவல்லவை அல்ல. சிவபெருமான் தான் அவற்றுள் நின்று பயனைத் தருகின்றான். எனவே முழுமுதல் பொருளாகிய சிவபெரு-மானின் வடிவங்களை வணங்குவதே பொருத்தமாகும்.

அம்பாள் சிவபெருமானின் கருணை சக்தி ஆகும். அவளைக் கோரவடி-வங்களில் வைத்து வணங்கக் கூடாது. சாந்த வடிவங்களில் வைத்துத்தான் வணங்க வேண்டும். மீனாட்சி, விசாலாட்சி முதலிய வடிவங்கள் சாந்த வடிவங்களாகும். துர்க்கை, காளி முதலியவை கோர வடிவங்களாகும்.

''நித்த மணாளர் நிரம்ப அழகியர்; என் சித்தத்துள் இருப்பர் என்றுந் தீபற'' என்பது திருவாசகம். இறைவன் வடிவம் மிகவும் அழகானதாக இருக்க வேண்டும். அழகான திருமேனியை எடுத்துக்கொண்டு அத-னையே சிந்திக்க வேண்டும். அதற்குரிய நாமங்களையும் மந்திரங்களையும் சொல்ல வேண்டும். திருமுறைப்பாக்களை ஓத வேண்டும். இவ்வாறு செய்து வந்தால் இறைவன் நாம் வழிபடும் வடிவத்தில் காட்சி தரு-வான். அக்காட்சியின் பயனாக உயர்ந்த நிலையை எய்துவோம். அவனே பின்னர் குருநாதனாக வந்து ஞானத்தை உணர்த்தி முத்திப் பேரின்பத்தை வழங்குவான்.

உருவழிபாட்டை வீட்டிலும் செய்ய வேண்டும்; கோயிலிலும் செய்ய வேண்டும். கோயில் வழிபாட்டுக்கும், வீட்டு வழிபாட்டுக்கும் வேறுபாடு உண்டு. கோயிலில் பெரியவர்கள் திருவடிபட்டு இருப்ப-தாலும் இலட்சக்கணக்கான மக்கள் வந்து வழிபடுவதாலும், அங்கே ஓர் ஆற்றல் முனைத்து விளங்கும். அது விரைவில் நமக்கு மன ஒருமைப்பாட் டைத் தரும். வீட்டில் இது போன்ற நிலை இல்லை. இருப்பினும் இல்லற-வாசிகளாகிய நாம் வீட்டுவழிபாட்டையும் விடாது செய்ய வேண்டும். அது குடும்பம் நன்னிலை அடையத் துணை செய்யும். பக்குவம் மிகுந்து விட்டால் இரண்டு வழிபாடும் ஒரே மாதிரியாகவே கொள்ளப்படும்.

உருவத்தை உடலால் வணங்குவது சரியை; பூப்போடுதல், வலம் வரு-தல் முதலியன சரியையின் பாற்படும். மந்திரங்களை ஓதுவது கிரியை; மனத்தால் உருவத்தைத் தியானிப்பது யோகம். ஞானம் இருவகைப்படும். ஒன்று அபரஞானம்; அது சித்தாந்த சாத்திரங்களை ஓதுவதன் வாயிலாக உண்டாகும். சித்தாந்த சாத்திரங்களை ஓதும் பொழுது தனியே ஓதக் கூடாது.



சரியை கிரியை, யோகங்களைச் செய்து கொண்டுதான் ஓதவேண்-டும். வழிபாடு இல்லாமல் சாத்திரங்களை ஓதினால் உண்மை ஞானம் உண்-டாகாது. மற்றொரு வகை ஞானத்திற்குப் பரஞானம் என்று பெயர். சரியை கிரியை யோகங்களைச் செய்து வந்தால், மலபரிபாகம், இரு வினை ஒப்பு, சத்திநிபாதம் ஆகிய மூன்றும் உண்டாகும். ''மலபரிபாகம்'' என்-பது மலம் நீங்குவதற்கு உரிய நிலையை எய்துவதாகும். நல்வினை தீவினை-களையும் அவற்றின் பயனாகிய இன்பதுன்பங்கள் இரண்டையும் சமமாக நோக்கி விருப்பு, வெறுப்பு அற்ற நிலையை அடைவது இருவினை ஒப் பாகும். இறைவனின் அருள் நம்மீது பொழியப்படுவதைச் சத்திநிபாதம் எனச் சாத்திரம் கூறும். நாம் பக்குவம் எய்தியதும், இறைவன் மானிடச் சட்டை போர்த்தியோ சீவன் முத்தர் ஒருவரை அதிட்டித்தோ, குரு நாதனாக வந்து ஞானத்தை உணர்த்துவான். ஞானம் பெற்ற பின்னர் ஆன்மா இறைவனோடு இரண்டறக் கலந்து பேரின்பத்தை நுகரும். அப்புறம் அதற்குப் பிறப்பில்லை. இறைவனோடு இரண்டறக் கலக்கும் நிலையைச் ''சாயுச்சிய முத்தி'' எனச் சாத்திரம் சொல்லும்.

சரியையில் நின்றோர் சாலோகத்தையும், கிரியையில் நின்றோர் சாமீ-பத்தையும், யோகத்தில் நின்றோர் சாரூபத்தையும், ஞானத்தில் நின்றோர் சாயுச்சியத்தையும் அடைவர் எனச் சாத்திரங்கள் கூறுகின்றன. இந்தப் படி முறையை நாம் அதிகமாக நோக்க வேண்டுவதில்லை.

இறைவனின் உருவத்திருமேனியில் நம் நெஞ்சைப் பதிப்பிக்க வேண்-டும்; இடைவிடாது அவன் நாமத்தைச் சொல்ல வேண்டும். திருமுறை-களை முறையாக ஓத வேண்டும். ஐந்தெழுத்தை உருவேற்ற வேண்டும்; ஒழுக்க நெறி பிறழாமல் வாழவேண்டும். படிப்படியாக உலகப்பற்றைக் குறைக்க வேண்டும். சித்தாந்த சாத்திரங்களை ஓதித் தத்துவ உண்மைகளை அடிக்கடி சிந்திக்க வேண்டும். இப்படிச் செய்து வந்தால் சரியை, கிரியை, யோகம், அபரஞானம் ஆகிய நான்கும் தாமே கைகூடும். பற்றொழிந்த நிலையில் இறைவன் உண்மை ஞானத்தை உணர்த்துவான். அந்த ஞானம் நமக்கு முக்தியைத் தரும்.

ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்றும் நித்தியப் பொருட்கள் என முன்னர் குறிப்பிட்டோம், அவை நித்தியப் பொருட்களாக இருந் தாலும் இறைவனோடு நாம் ஒன்றியதும் அவை நம்மைப் பாதிக்க முடி-யாமல் போகும். அவை நித்தியமாக இருந்தும் இறுதியில் நம்மைப் பாதிக்க முடியாத நிலையை எய்துவதால் அவை ஒடுங்கிவிட்டன என்றோ, நீங்கி-விட்டன என்றோ சாத்திரங்கள் சொல்லும். ''ஒடுக்கம்'', ''நீக்கம்'' என்-னும் சொற்களை , அவை பயன்படுத்தினாலும் அவற்றின் உண்மைப் பொருள், அவை நம்மைப் பாதிக்க முடியாத நிலையை அடையும் என்-பதே ஆகும்.

விநாயகர் வழிபாடு, முருகன் வழிபாடு, அம்பிகை வழிபாடு ஆகியவையும் சிவ வழிபாடே என்று முன்னர்க் கூறியுள்ளோம். அம்பிகை வழிபாட்டைச் சிவபெருமானின் சக்தி வழிபாடு என்றே கொள்ளவேண்டும். சாக்தமத அடிப்படையில் அதனைக் கொள்ளக்கூடாது. சாக்தமதம் சக்தி சிவபெருமானை விட மேற்பட்டவள் எனச் சொல்லுகிறது. அக் கொள்கை சைவத்திற்கு உடன்பாடன்று. சிவபெருமானின் சக்தி என்றே அம்பிகையைக் கொள்ள வேண்டும் முருகனுக்கு என்றும் விநாயகருக்கு என்றும் அம்பிகைக்கென்றும் தனித்தனி மந்திரங்கள் உண்டு; ஐந் தெழுத்து சிவபெருமானுக்குரிய மந்திரம் ஆகும். சிவபெருமானே மற்ற மூர்த்தங்களாகவும் நிற்பதால் பஞ்சாட்சரத்தையும் திருமுறைகளையும் எல்லா மூர்த்தங்களிடத்தும் ஓதலாம். ஒரு மூர்த்தத்தை எடுத்துக் கொண்டுவிட்டால், அந்த மூர்த்தத்தையே வழிபடவேண்டும். மூர்த் தத்தை மாற்றக் கூடாது.

நம் இஷ்ட மூர்த்தம் இருதய கமலத்தில் இருப்பதாக மனத்தால் பாவித்து அதனைத் தலையில் இருந்து பாதம் வரையும், பாதம் முதல் தலை வரையும் கூர்ந்து நினைக்க வேண்டும். அந்த வடிவத்திற்கு மனத்தால் அபிஷேகம் ஆராதனை அத்தனையும் செய்ய வேண்டும். மந்திரத்தை மானசீகமாக உருவேற்ற வேண்டும். மந்திரமும் தியானிக்கும் வடிவமும் ஒன்றாகுமாறு பதினைந்து, இருபது நிமிடங்கள் தியானிக்க வேண்டும். இவ்வாறு செய்து வந்தால் நாம் நினைத்திருக்கும் உருவத்தில் மனம் அற்புதமாக ஒன்றிவிடும். இதனை மானசீக பூஜையென்றும் சொல்லுவர். இந்தப் பூஜையின் பயனாக நாம் பூசிக்கும் மூர்த்தம் நமக்கு நேரே காட்சி தரும். அந்தக் காட்சியில் நாம் ஒன்றியதும் உலகப் பற்று நீங்கும். அந்தக் காட்சி நமக்குப் பெரியதோர் ஆனந்தத்தைத் தரும். படிப்படியாகவும் விடாமலும் தியானத்தைப் பலகாலம் நாம் செய்ய வேண்டும். சோர்வடையாமல் தியானத்தைச் செய்து வந்தால் அருட்காட்சி தரிசனம் நிச்சயம் கிடைக்கும். இத்தரிசனத்திற்குப் பின்னர் இறைவனே குருவாக வந்து வியாபக நிலையை உணர்த்தி முத்திப்பேரின்பத்திற்கு இட்டுச் செல்வான். இங்கே சொல்லப்பட்டவை சைவவழிபாட்டு முறைகள் என அறிதல் வேண்டும்.

"ஆரொருவர் உள்குவார் உள்ளத்துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்"

— அப்பர் தேவாரம்

---



## திருமுறைச் சிறப்பு

முறையாகத் தீட்சை பெற்றுச் சிவவழிபாடு செய்வது ஒருமுறை. இதனைச் சித்தியார் கூறுகிறது. எல்லா மக்களும் தீட்சை பெற்றுச் சிவ வழிபாட்டில் இறங்குவது இயலாது எனக் கருதிய ஞானசம்பந்தர், "தோடுடைய செவியன்" என்னும் திருப்பதிகத்தைப் பாடி அதனை ஓதினால் அஃது தீட்சைப் பேறாகும் எனக் கூறி அருளியிருக்கிறார். இதனைச் சேக்கிழார், "மாநிலத்தோர்க்கு உரை சிறப்ப வாய்மலர்ந்தார்" எனக் கூறுகிறார். "உரை சிறப்ப" என்றால் "உலகத்தார் வாசகதீட்சை பெற" என்று பொருள். இதேபோல் அப்பர் சுவாமிகள் "கூற்றாயினவாறு" என்னும் பதிகத்தைப் பாடியுள்ளார். சுந்தர மூர்த்தி சுவாமிகள், "பித்தா பிறை சூடி" என்னும் பதிகத்தைப் பாடியுள்ளார். "தோடு, கூற்று, பித்தா இம்மூன்றும் பீடுடைத்தேசிகன் பேரருளாகும்" எனப் பெரியோர்கள் கூறியுள்ளனர். இம்மூன்றும் குருவருள் பதிகங்களாகும். இம் மூன்று பதிகங்களில் ஏதேனும் ஒன்றை ஓதிவிட்டு மந்திர ஜபம் செய்தால் அது தீட்சை பெற்று மந்திரம் ஜபிப்பதற்குச் சமமாகும்.

திருமுறைகள் வேத மந்திரங்களுக்கு மேலானவையாகும். மறைக்கதவினைத் திறந்ததும், முதலை உண்ட பாலனை அழைத்ததும், எலும்பைப் பெண்ணாகச் செய்ததும். திருமுறை வாக்குகள் என்பதை யாவரும் அறிவர். வேத மந்திரங்கள் இவ்வளவு பெரிய அற்புதங்களைச் செய்யவில்லை. வேதாரணியத் திருக்கோயிலின் கதவைத் திறந்த சமயத்தில் சேக்கிழார் ஒரு பாடல் பாடி இருக்கிறார், "வேதத்திற்கும் திருமுறை வாக்கிற்கும் இடையீடு பெரிதாம் அன்றே" என அப்பாடலில் கூறியிருக்கிறார். "இடையீடு" என்பது "ஒற்றுமை" என C.K.S. தம் பெரிய புராண உரையில் கூறியிருக்கிறார். ஆனால் அது பொருந்தாது. "இடையீடு" என்பது இங்கே திருமுறை வாக்குகள் வேதமந்திரங்களைவிடச் சிறந்தவை என்பதையே உணர்த்துகிறது. வேதம் இறைவனால் அருளிச் செய்யப்பட்டது எனக் கூறுவர். திருமுறையை அடியார்கள் இறைவன் உள்நின்று உணர்த்த அருளிச் செய்தார்கள், வேதத்தை ஓதும் பொழுது இறைவன் வாக்கையே அவனுக்கு எடுத்து ஓதுகிறோம் என்றாகிறது. அதில் அவ்வளவு சிறப்பில்லை. அடியார்களின் வாக்குகளை ஓதும்பொழுது இறைவனுக்குப் பேரானந்தம் உண்டாகிறது.

திருமுறைகளைப் பாடாமல் நேரடியாக இறைவனை வழிபடலாமா? பயன் உண்டா? என வினவலாம். வழிபடலாம். ஆனால் பயன் குறைவு. ஒருவன் ஒரு சிந்துப் பசுவை $2000 கொடுத்து வாங்கி வந்தான். அஃது அதிக அளவில் பால் கறக்கக் கூடியது. முதல் நாள் பால் கறக்கச் சென்ற பொழுது பால் வரவில்லை; உதைதான் கிடைத்தது. ஏன் தெரியுமா? கன்-

றுக் குட்டியைப் பால் குடிக்கவிடாமல் அவன் நேரடியாகப் பால் கறக்க முயன்றான். நேரடியாகச் சென்று கறந்தால் பால் கிடைக்காது. கன்றின் வாயிலாகப் பால் சுரக்கச் செய்து அப்புறம்தான் பால் கறக்க வேண்டும். இறைவனின் அடியார்கள் அவனின் குழந்தைகளாகக் கருதப்படுவார்கள். ''சிவனார் மகனார்'' என ஞானசம்பந்தரைச் சேக்கிழார் சொல்கிறார். இறைவனின் குழந்தைகளான அடியார்களின் வாக்குகளை முதலில் ஓதினால் இறைவனின் திருவருள் எளிதில் சுரக்கும்.

திருமுறைப் பாடல்களை அருளாளர்கள் தமக்காகப் பாடவில்லை. அவர்கள் ஞானம் பெற்ற பின்னரே பாடியிருக்கிறார்கள். ஆகவே அவை நமக்காகப் பாடப்பெற்றவையாகும். அவற்றை ஓதிப் பயன் பெற வேண்டுவது நம் கடமை.

ஞானசம்பந்தரின் திருப்பதிகங்களில் உள்ள கடைசிப் பாட்டு ''திருக்கடைக்காப்பு'' என்று சொல்லப்படும். அதில் அந்தப் பதிகங்களை ஓதினால் ''என்ன பயன்கிடைக்கும்?'' என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். சுந்தரரும் இவ்வாறு தம் இறுதிப் பாட்டில் கூறியிருக்கிறார். இப்பதிகங்களை ஓதுவதால் ஊழ்வினையின் பிடிப்பில் இருந்து நாம் விடுபடலாம் என இருவரும் கூறியுள்ளனர். ஆகவே திருமுறைகளை ஓதுவதன் மூலம் இம்மைப் பயன், மறுமைப் பயன், அம்மைப் பயன் ஆகிய மூன்றையும் பெறலாம்.

திருவாசகம் நெஞ்சை உருக்கும் தன்மை வாய்ந்தது. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆகிய இரண்டும் நம் உள்ளத்தை ஒருமைப் படுத்தும் திறம் வாய்ந்தவையாகும். பெரியபுராணம் அடியார்களின் வரலாற்றை அருமையாக எடுத்துக் கூறுகின்றது. பதினோராம் திருமுறையில் உள்ள காரைக்கால் அம்மையார் திருவந்தாதி நம்மை உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்லும் ஆற்றல் உள்ளது. இவ்வாறு பன்னிரு திருமுறைகளும் நம்மை உய்விப்பதற்காகவே தோன்றியுள்ளன.

திருமுறைகளை நாடோறும் நம் வழிபாட்டில் ஓத வேண்டும். படுக்கும் பொழுதும் காலையில் எழுந்தவுடனும் அவற்றில் உள்ள ஓரிரு பாடல்களையாவது சொல்லப் பழகிக் கொள்ள வேண்டும்.

திருமுறைகள் நமக்குக் கிடைத்த தமிழ்க் கருவூலங்கள் ஆகும். அவற்றைப் பயன்படுத்தி உய்யவேண்டுவது நம் இன்றியமையாத கடமையாகும்.



## முத்தி என்பது என்ன?

சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு சாதனங்களைப் பற்றி முன்னர் குறிப்பிட்டிருக்கிறோம். ஞானத்தால் சாயுச்சிய முத்தி பெறலாம் என்பதையும் சொல்லியிருக்கிறோம்.

இறைவன் பரம வியாபகமாக இருக்கின்றான். நாம் உடம்பிற்குள் கட்டுப்பட்டிருக்கிறோம். உலகப் பற்றையும் உடல் பற்றையும் நீக்கி விட்டால் பரமவியாபகனான இறைவனோடு ஒன்றாகக் கலந்து என்றும் மாறாத பேரின்பத்தை அனுபவிப்போம். இதனையே சாயுச்சிய முத்தியெனச் சாத்திரம் சொல்லும்.

சாயுச்சிய முத்தியில் நமக்கு எந்த விதமான உடம்பும் இல்லை. தூலம், சூக்குமம், பரம் ஆகிய மூன்று உடம்புகளும் நம்மை விட்டுப்போய்விடும். இதனைத் திருக்குறளில் ''மற்றும் தொடர்ப்பாடு எவன் கொல் பிறப்பறுக்கல் உற்றார்க்கு உடம்பும் மிகை'' என வள்ளுவர் கூறியிருக்கிறார். வைணவம் முத்தி நிலையில் நமக்கு அப்பிராகிருத உடம்பு ஒன்று உண்டு எனச் சொல்லுகிறது. வேறு சில சமயங்களும் முத்தி நிலையில் நமக்கு ஒளி உடம்பு உண்டெனச் சொல்கின்றன. வள்ளலார் கூடப் பிரணவதேகம் பற்றிப் பேசியிருக்கிறார். ஆனால் சைவசித்தாந்தம் நமக்கு முத்தி நிலையில் எந்த உடம்பும் இல்லையெனக் கூறுகிறது. இறைவன் எப்படி வியாபகமாக இருக்கின்றானோ அப்படியே ஆன்மாவும் இறைவனோடு கலந்து வியாபகமாக நிற்கும் என்பது சித்தாந்தக் கொள்கையாகும். கலந்து நிற்பதன் பொருள் நாம் அங்கு இல்லை என்பதன்று; சிவானந்தத்தில் நம்மை முழுதும் மறந்த நிலையில் இருப்போம். நம்மை மறக்கின்ற காரணத்தால் நாம் இருந்தும் இல்லாதவர்கள் போல் ஆகி விடுவோம். எனினும் சிவானந்த நுகர்ச்சி நமக்கு இருப்பதால் நாம் அங்கு இருக்கிறோம் என்பது தெளிவு. இதனை

*''முத்திதனில் மூன்றும் முதலும் மொழியக் கேள்.*
*சுத்த அனுபோகத்தைத் துய்த்தல் அணு - மெத்தவே*
*இன்பம் கொடுத்தல் இறை - இத்தை விளைவித்தல் மலம்,*
*அன்புடனே கண்டுகொள் அப்பா''*

என்று உண்மை விளக்கம்கூறுகின்றது. இறைவன், உயிர், மலம் ஆகிய மூன்றும் முத்தியில் உண்டு. இறைவன் உயிருக்குப் பேரின்பத்தை வழங்குவான்; உயிர் தன்னை மறந்து அதனை அனுபவிக்கும்; மலம் அதனைப் பாதிக்க முடியாமல் வலி குன்றிக்கிடக்கும்.

முத்தி நிலையில் பேரானந்தத்தை அனுபவிக்கும் பொழுது, நாம் நம்மை மறந்தே ஆக வேண்டும்.

இராமாயணத்தில் இராமன் வில்லை ஒடித்த பொழுது வில் முறிந்த ஒலி அயோத்தி வரை கேட்டது. ஆனால் சீதையிடம் வந்து ''இராமன் வில்லை ஒடித்துவிட்டான்'' என நீலமாலை சொன்ன பொழுது அவள் மிகவும் வியப்புற்றாள். ''வில் முறிந்த ஒலி எனக்குக் கேட்க-வில்லையே?'' என்றாள். அவள் தன்னை மறந்து இராமன் நினைவாகவே இருந்ததால் வில் ஒடிந்த ஒலி அவளுக்குக் கேட்கவில்லை.

நாம் ஒன்றில் அதிக ஈடுபாடு கொண்டு உறைத்து நின்றால் நம்மை நாம் மறந்துவிடுவோம்.

முத்தி நிலையிலும் இப்படித்தான் நிகழ்கின்றது. அந்நிலையிலும் இறைவன் ஒன்றாகவும் வேறாகவும் உடனாகவும் இருக்கின்றான். அவ-னுடன் நாம் முழுமையாகக் கலப்பதால்தான் பேரின்பம் குறைவுபடாது கிடைக்கின்றது; அவன் வேறாக நிற்பதால் பேரின்பத்தை அவன் நமக்கு ஊட்ட முடிகின்றது; அவன் உடனாக நிற்பதால் அந்தப் பேரின்பத்தை நாம் அனுபவிக்கின்றோம். இஃது சைவசித்தாந்தம் சொல்லும் முத்தி நிலையாகும்.

''கலந்தவர் பிரிவது இல்லை''யென அப்பர் சுவாமிகள் சொல்வதால் சாயுச்சிய முத்தியைப் பெற்ற உயிர்கள் இறைவனை விட்டு நீங்குவதில்லை. இஃதே ஆன்மாவின் இறுதிப் பேறாகும். சாதனைகள் மூலம் படிப்படியே முன்னேறி இந்தப் பேற்றை நாம் பெறவேண்டும். இடையிடையே நம் உயிர் நீங்கினாலும் நாம் மீண்டும் பிறந்து இச்சாதனைகளைச் செய்யும் வாய்ப்பை இறைவன் தருவான்.

ஆகவே சாதனைகள் ஒருபோதும் வீண்போக மாட்டா. சாதனைகளின் இடையிலேயே நாம் இறைவனின் அருள் கூறுகளைப் பலவாறாக அனு-பவிப்போம். துன்பம் அற்ற - என்றும் இன்பமாக உள்ள பேரின்ப நிலையை எய்துவதே மானிடப் பிறவியின் இறுதிக் குறிக்கோளாகும்.

''இன்பமே சூழ்க, எல்லாரும் வாழ்க!''



## வினாக்களும் விடைகளும்

**வினா (1) :**

துர்க்கை பூசை தேவையா? காளி பூசை தேவையா? திருவிளக்குப் பூசை தேவையா?

**விடை:**

*துர்க்கை, காளி முதலிய மூர்த்தங்கள் கொடூரமான நிலையில் உள்ளவை-யாகும். கொடுமை செய்தவர்களை அழிப்பதற்காகவே இம்மூர்த்தங்களைத் தேவி எடுத்ததாகத் தேவி பாகவதம் கூறுகிறது. காளிக்கு உயிர்ப் பலி-யிடும் முறைகளைச் சாக்த ஆகமம் சொல்லும். நாம் சாந்தமான மூர்த்தங்களையே வழிபட வேண்டும். ஆகவே துர்க்கை பூசை, காளி பூசை நமக்குத் தேவையில்லை. இப்பொழுது சிவன் கோவிலில் கூடத் துர்க்கை பூசையை விரிவாக நடத்துகிறார்கள். இத்தகைய பூசைகள் திருமுறைக்கு மாறான-வையாகும். இப்பூசைகளை நாம் செய்யக்கூடாது. ''பொன்னும், மெய்ப் பொருளும் தருவானை'' எனச் சுந்தரர் பாடுவதால் சிவ வழிபாட்டி-லேயே பொன்னும் பெறலாம்; புகழும் பெறலாம். நோய் நீக்கமும் பெற-லாம். பகைவரும் திருந்துவர். சிவ வழிபாடு ஒன்றே போதும். ஏனைய வழிபாடுகள் தேவையில்லை. ஆறுமுக நாவலர் சொன்னது போல சிவனையும் அவனின் வேறாகாத விநாயகர், முருகன், அம்பிகை முதலிய மூர்த்தங்களையுமே சைவப் பெருமக்கள் வழிபட வேண்டும். இவற்றுள் ஒரு மூர்த்தத்தை வழிபடு மூர்த்தமாகக் கொள்ளவேண்டும்.*

*இறைவன் திருமுன் திருவிளக்கு ஏற்றினாலே அது திருவிளக்குப் பூஜைதான். தனியாகத் திருவிளக்குப் பூஜை ஒன்று தேவையில்லை. பொருள் சம்பாதிப்பதற்காகத் திருவிளக்குப் பூஜை ஒன்றை இப்போது ஏற்படுத்தி இருக்கிறார்கள். திருமுறை வழிபாட்டைப் பின்பற்றுபவர்கள் அதில் மயங்கக்கூடாது.*

**வினா (2) :**

கோவிலில் திரையிட்டிருக்கும் பொழுது வணங்கலாமா?

**விடை:**

*திரையிட்டிருக்கும் பொழுது வணங்கக்கூடாது; வலம் வரக்கூடாது; அமைதியாக இருக்க வேண்டும். திரை திரோதன சக்தியை அதாவது மறைப்புச் சக்தியைக் குறிக்கும். தீபஜோதி காட்டுவது அருள் விளக்கத்தைக் குறிக்கும். அப்பொழுது நாம் வழிபடவேண்டும்.*

வினு (3) :

தியானம் மட்டும் போதாதா? புறவழிபாடு செய்ய வேண்டுமா?

விடை:

நாம் உடல், மனம், வாக்கு, ஆகிய மூன்றையும் கொண்டு இறைவனை வழிபட வேண்டியவர்களாக இருக்கின்றோம். உடலால் வழிபடுவது சரியை; மனத்தால் வழிபடுவது யோகம்; வாக்கால் வழிபடுவது கிரியை; இம்மூன்றையும் செய்தால்தான் உடல், மனம், வாக்கு ஆகியவை தூய்மை பெறும். மனம் கட்டுப்படுவதற்கு உடல் தூய்மையும் வாக்குத் தூய்மையும் அவசியம். எனவே தியானத்தை மிகுதியாகச் செய்தாலும் உடல் வழிபாடும் வாக்கு வழிபாடும் அவசியம் செய்தே ஆக வேண்டும்.

வினு (4) :

வள்ளலார் உருவ வழிபாட்டைக் கண்டித்துள்ளார் என்பது உண்மையா?

விடை:

வள்ளலார் உருவ வழிபாடு செய்து முருகனை நேரே கண்டார். ''சீர் கொண்ட வதனங்கள் ஆறும் என் கண்ணுற்றதே'' என்பது அவர் வாக்கு. விநாயகர் பற்றியும், நடராசர் பற்றியும் நிறைய அவர் பாடி இருக்கிறார். அருட்சோதி பற்றிப் பாடும் ஆறும் திருமுறையிலும் நடராசரைப் பற்றி அவர் பாடியிருக்கிறார். ''விளையாடும் பருவத்தே என்னைப் பாட வைத்தாய்'' என அவரே சொல்வதால் ஐந்தாம்திருமுறை வரை உள்ள பாடல்களும் அருளால் பாடப்பெற்றவையே ஆகும். அவற்றைத் தள்ள நமக்கு உரிமையில்லை. அப்படித் தள்ளினுல், ''நீ என்னைப் பாடவைத்தாய்'' என ஐந்தாம் திருமுறையில் அவர் சொல்வது பொய்யாகப் போய்விடும். உருவம், அருவுருவம், அருவம் ஆகிய மூன்று வழிபாடுகளையும் அவர் சொல்கிறுர் ''அருட் சோதி'' வழிபாடும் திருமுறையில் இருந்து அவர் எடுத்ததுதான். ''ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்சோதி'' என்றும் ''கேழில் பரங்கருணை, கேழில் பரஞ்சோதி'' என்றும் மணிவாசகர் பாடி இருப்பவைகளைத் தாம் அவர் அருட்சோதி பற்றிப்பாடும் பொழுது பின்பற்றியிருக்கிறுர். உருவ வணக்கம் வேண்டாம் என அருட்பாவில் எவ்விடத்திலும் சொல்லவில்லை. வசன பாகத்தில் சொல்லப்பட்டிருப்பவைகளைக் கொண்டு வள்ளலார் உருவ வணக்கத்தை மறுத்திருக்கிறுர் எனச் சிலர் சொல்கின்றனர். வசன பாகம் அவர் நேரடியாகச் சொன்னதன்று. சீடர்கள் அதனை எழுதியிருக்கிறுர்கள். சுவாமிகள் சொன்ன சந்தர்ப்பங்கள் யாவை? என்பதை அந்த வசன பாகம் குறிப்பிடவில்லை. சந்தர்ப்பம் தெரிந்தால்தான் அந்த வசன பாகத்திற்கு நாம் சரியாகப் பொருள் கொள்ள முடியும். ஜோதி வழிபாடு அருவுருவ



வழிபாடேயாகும். ஜாதி, சமய, சங்கற்ப, விகற்பம் இல்லாமல் எல்லாரும் வழிபடுவதற்காகத்தான் அவர் அருட்சோதி வழிபாட்டைத் தோற்றுவித்தார். இதனை வைத்து உருவ வழிபாடு வேண்டாம் என அவர் சொல்லியிருக்கிறுர் என்பது பொருந்தாது.

வினு (5) :

ஏன் மந்திரங்களைச் சமஸ்கிருதத்தில் ஓத வேண்டும்?

விடை:

மந்திரங்களைத் தமிழிலும் ஓதலாம்! சமஸ்கிருதத்திலும் ஓதலாம். சமஸ்கிருத மந்திரங்களுக்கு உச்சரிப்பு மிக முக்கியம். பிழையாக உச்சரித்தால் தீயபலன்களைத் தரும் என வடமொழி நூற்கள் சொல்லுகின்றன. தமிழ் மொழியில் ஒலி முக்கியமன்று; பொருள்தான் முக்கியம். பிழையாக ஓதினுலும் இறைவன் மன்னித்துத் திருவருள் பாலிப்பான் எனத் திருமுறைகள் சொல்கின்றன. இறைவன், மொழி கடந்தவன். எந்த மொழியிலும் அவன் நாமத்தை ஓதலாம். தமிழர்களாகிய நமக்கு நம் மொழியில் ஓதுவதுதான் எளிது. சமஸ்கிருதத்திற்கு ஓர் ஏற்றம் கற்பிப்பதற்காக அதனை உயர்த்திச் சொல்லியிருக்கிறுர்கள். ''ஓம்'', ''நம'', ''பட்'', ''அஸ்த்ராய நம'' முதலிய மந்திர முடிவுகள் எல்லா மொழிக்கும் பொதுவானவை என அறிதல் வேண்டும். ''சிவாயநம'' பொருள் கொள்ளும் நிலையைப் பொறுத்துத் தமிழ் மொழியாகவும் கொள்ளப்படும்; வடமொழியாகவும் கொள்ளப்படும். ''சிவனுக்கு நமஸ்காரம்'' வடமொழி; சி - சிவன் வ - சக்தி, ய - ஆன்மா, ந - திரோதானம், ம - மலம் எனப் படும்போது தமிழ்மொழியாகும். ''காண்'' ''போலும்'' ''கண்டாய்'' என்னும் தமிழ் மந்திர முடிவுகளை அப்பர் பயன்படுத்தியுள்ளார்.

வினு (6) :

இறைவனுல் விதியை மாற்ற முடியுமா?

பதில்:

விதிப்பயனை இறைவன் நம் நன்மைக்காகத்தான் ஊட்டுகின்றுன். ஆகவே நாம் திருந்தும் வரை ஊழ்வினைப் பயனை ஊட்டியே தீர்வான். ஆனுல் ஆழமான வழிபாடு நம்மைத் திருத்தும் வல்லமை வாய்ந்தது. திருமுறை வாக்குகளுக்கு ஒரு தனி ஆற்றல் உண்டு. ஆழமான வழிபாட்டாலும் திருமுறை வாக்குகளை ஓதுவதாலும் ஊழ்வினையை வெல்லலாம் என்பதே சைவக் கருத்தாகும். இதற்காகத் தான் ''மார்க்கண்டேயர்'' வரலாறு கூறப்பட்டுள்ளது. இறைவன் ஊழை எளிதில் மாற்றமாட்டான். மிகக் கடுமையாக முயன்றுல் அவன் திருவருள் பலத்தால் ஊழை வெல்லலாம்.

வினா (7)
நவக்கிரக வழிபாடு தேவையா?

பதில்

நவக்கிரகங்கள் அதிதெய்வங்கள் ஆகும். அவை இறைவனின் கட்டளையை நிறைவேற்றும். ஊழ்வினையை நீக்கும் அதிகாரம் அவற்றுக்கு இல்லை. சிவ வழிபாட்டால் தான் ஊழ்வினையை மாற்ற இயலும். நவக்கிரகங்களை வழிபடுவதால் தீங்கொன்றும் இல்லை. உயிர்ப்பலி கொள்ளும் சிறு தெய்வங்களை வழிபடுவதுதான் தீங்காகும். அதிதெய்வங்களை வழிபடுவதால் நமக்குப் பயன் இல்லை. ''வேயுறு தோளி பங்கன்'' என்னும் ஞானசம்பந்தரின் பதிகத்தைப் பாடினாலே போதும். கிரகங்கள் நம் வினைக்கு ஏற்றவாறுதாம் துன்பங்களை ஊட்டும். ''வேயுறு தோளி பங்கனை'' ஓதுவதன் மூலம் இறைவனின் திருவருள் கிடைக்கின்றது. ஞானசம்பந்தரின் ஆணையும் இந்தப் பதிகத்திற்கு உண்டு. ''வேயுறு தோளி பங்கன்'' இறைவன் திருவருளால் வினைப் பயனின் வலிமையைக் குறைக்கிறது. இது காரணமாகவே கிரகங்களால் வரும் துன்பம் அப்பதிகத்தால் நீங்கும் எனச் சொல்லுகிறோம். சிவ வழிபாட்டிலேயே எல்லாப் பயன்களையும் பெற முடியுமாதலால் நவக்கிரக வழிபாடு தேவையில்லை. மேலும் சிவனை வணங்கும் பொழுது எல்லாத் தெய்வங்களையும் வணங்கிய பயன் கிடைக்கிறது. எத்தனையோ அதிதெய்வங்கள் பிரபஞ்சத்தில் உண்டு. அவற்றை எல்லாம் வணங்குவது என்றால் நம் ஆயுள் போதாது. சிவனை வழிபடுவதன் மூலம் எல்லாத் தெய்வங்களின் பயனையும் பெறுவதுதான் அறிவுடைமையாகும்.

வினா (8) :
காயத்திரி மந்திரத்தைப் பெண்கள் ஓதலாமா?

விடை :

ஓதக்கூடாது என்று தான் வடமொழி நூற்கள் சொல்கின்றன. வடமொழியில் பெண்களுக்கு ஏற்றம் இல்லை. அவர்கள் கணவனை வழிபட்டால் போதும் என அம்மொழியாளர்கள் சொல்கின்றனர். தமிழ் மொழியில் ஆண், பெண் இருபாலார்க்கும் இடம் உண்டு. பெண்கள் மந்திரம் ஜபிக்கலாம்; திருமுறைகள் ஓதலாம்; நேரடியாக இறைவனை வழிபடலாம். அப்படிச் செய்யும் வழிபாடு கணவனுக்கும் நன்மை செய்யும் எனத் தமிழ் நூற்கள் கூறுகின்றன.

வினா (9) :
வட மொழி வேதவாக்கியங்களை எல்லாரும் ஓதலாமா?



விடை :

பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் ஆகிய மூன்று வருணத்தாரும் வேதத்தை ஓதலாம் என்றும் சூத்திரர் அதனைக் கேட்கலாமேயன்றி ஓதக்கூடாதென்றும் வடமொழி நூற்களில் சொல்லி இருக்கிறார்கள். இத்தகைய தடைகள் தமிழ் மொழியில் இல்லை. எல்லாரும் ஓதலாம், ஞானசம்பந்தரின் பதிகத்திற்குத் தாழ்ந்த ஜாதியாராகிய திருநீலகண்ட யாழ்ப்பாணர் யாழ் வாசித்தார் என்பதனை நினைத்துப் பார்த்தால் திருமுறைகள் எல்லார்க்கும் உரியன என்பது புலனாகும்.

திருச்சிற்றம்பலம்

# சைவ சித்தாந்த சாத்திரம் பதினான்கு

1. திருவுந்தியார் — திருவியலூர் உய்யவந்த தேவநாயனார்
2. திருக்களிற்றுப்படியார் — திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார்.
3. சிவஞானபோதம் — மெய்கண்ட தேவர்
4. சிவஞானசித்தியார் — திருத்துறையூர் அருணந்தி சிவாசாரியார்
5. இருபா இருபது — திருத்துறையூர் அருணந்தி சிவாசாரியார்
6. உண்மை விளக்கம் — திருவதிகை மனவாசகங் கடந்தார்
7. சிவப்பிரகாசம் — கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார்
8. திருவருட்பயன் — கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார்
9. வினாவெண்பா — கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார்
10. போற்றிப்பஃறொடை — கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார்
11. கொடிக்கவி — கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார்
12. நெஞ்சுவிடுதூது — கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார்
13. உண்மைநெறி விளக்கம் — கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார்
14. சன்கற்ப நிராகரணம் — கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார்

# ஆசிரியர் இயற்றி
# இதுவரை வெளிவந்துள்ள
# [redacted] சமய நூற்கள்

1. கடவுளால் முடியாத செயல்கள்

2. தடைகளும் விடைகளும் - முதல் பகுதி

3. தடைகளும் விடைகளும் - இரண்டாம் பகுதி

4. புலால் தின்பது தீவினையா?

5. திருவாசகச் சுவை

6. 36 தத்துவங்கள்

7. வாலி வதம் சரியா?

ISBN : 983-9742